https://t.me/tnpscfree

# நவீனகால இந்தியா

## ஐரோப்பியர்களின் வருகை

### போர்ச்சுக்கீசியர்கள்

- வாஸ்கோடாகாமா : இவர் 1498 மே 17ல் கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார். அப்பகுதி சாமரின் என்னும் மன்னரால் ஆளப்பட்டது. 1501ல் ஒரு தொழிற்சாலையை கொச்சியில் நிறுவினார்.
  இந்தியாவிற்குக் கடல் வழி காண்பதில் வெற்றி பெற்ற முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுகல்.

- இந்தியாவில் முதல் போர்த்துக்கீசிய ஆளுநர் பிரான்சிஸ்கோ அல்மெய்டா ஆவார்.
- இந்து மகாசமுத்திரத்தில் போர்ச்சுகீசியர்கள் ஆதிகத்தை மேம்படுத்த பின்பற்றிய கொள்கை "நீல நீர்க் கொள்கை" என அழைக்கப்பட்டது.

- அவரைத் தொடர்ந்து அல்போன்ஸா டீ அல்புபெர்க் 1509-ல் ஆளுநரானார். இவர் கோவாவை 1510ல் பிஜப்பூர் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார். இவர் சதியை ஒழித்தார். சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை தடுத்தமையால் சதி ஒழிப்பில் வில்லியம் பெண்டிங் பிரபுவிற்கு முன்னோடியாக திகழ்ந்தார்.

- நினோ-டா-குன்கா இந்தியாவின் போர்ச்சுக்கீசியர்கள் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு 1530ல் மாற்றினார். இவர் 1535ல் டையூ & 1559ல் டாமனை கைப்பற்றினார்.

- போர்த்துக்கீசியர்கள் 1631ல் ஹீப்ளியை ஷாஜகானின் ஆட்சியின் போது இழந்தனர்.

- கோழிக்கோடு, கொச்சின், கண்ணனூர் ஆகிய இடங்களில் போர்த்துக்கீசியர் பண்டக சாலைகள் நிறுவினர்.

- 1661ல் போர்ச்சுக்கீசிய மன்னர் தனது சகோதரியின் திருமண வரதட்சணையாக பம்பாயை சார்லஸ் II என்னும் ஆங்கிலேய மன்னருக்குக் கொடுத்தார்.

### டச்சுக்காரர்கள்:

Downloaded from https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses

https://t.me/tnpscfree

- 1602ல் டச்சு கிழக்கிந்திய கம்பெனி தொடங்கியது.
- 1605ல் இவர்கள் தங்களது முதல் தொழிற்சாலையை மசூலிப்பட்டினத்தில் (ஆந்திரா) துவங்கினர். மற்ற தொழிற்சாலைகளை புலிகாட், சின்சுரா, பாட்னா, பாலசூர், நாகப்பட்டினம், கொச்சி, சூரத், காரைக்கால், காசிம் பஜார் ஆகிய இடங்களில் அமைத்தனர்.
- சென்னைக்கு அருகே உள்ள பழவேற்காடு என்னுமிடத்தில் முதல் வணிகத்தலம் கட்டப்பட்டது.
- டச்சுக்காரர்களின் முக்கிய நோக்கம் வணிகம். இந்தியாவில் தங்களது அரசு அமைவதை விரும்பவில்லை.

**அம்பாயினாப் படுகொலை**

- 1623-ல் டச்சுக்காரர்கள் ஆங்கிலேயரை அம்பாயினா என்னுமிடத்தில் படுகொலை செய்தனர்.

**ஆங்கிலேயர்கள்:**

- ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி 1599ல் உருவானது. அரசியல் வியாபார அங்கீகாரம் 1600-ல் ராணி எலிபெத்தால் கிழக்கிந்தியாவில் வணிகம் செய்ய வழங்கப்பட்டது.
- 1613ல் சூரத்தில் வாணிப மையம் அமைக்க சர் தாமஸ் மன்றோ அனுமதி பெற்றார். சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரோச் நகரில் பண்டகசாலை ஏற்படுத்தப்பட்டது.
- 1616ல் கம்பெனி தனது முதல் தென் பகுதி தொழிற்சாலையை மசூலிப்பட்டினத்தில் நிறுவியது. 1633ல் கம்பெனி தனது முதல் கிழக்குப் பகுதி ஆலையை ஹரிகர்பூரில் (ஒரிஸா – பாலசூரில்) நிறுவியது.
- 1639ல் கம்பெனி சென்னையை ஒப்பந்தத்திற்கு எடுத்து(<u>சர்பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர்)</u> செயின்ட் ஜார்ஜ்கோட்டையை அமைத்தது (1640).
- 1668-ல் குத்தகையாக மும்பையை இரண்டாம் சார்லசிடமிருந்து இலண்டன் வாணிக நிறுவனம் வருட குத்தகை 10 பௌண்டு செலுத்தி பெற்றுக்கொண்டது.
- 1668ல் பம்பாய் கம்பெனியின் முக்கிய மேற்குப் பகுதி குடியேற்றமானது.
- கல்கத்தாவில் பண்டக சாலை நிறுவ1690-ல் அவுரங்கசீப்பிடம் இசைவு பெற்றனர்.
- 1696-ல் கல்கத்தாவில் அமைக்கப்பட்ட கோட்டை வில்லியம் கோட்டை என்று அழைக்கப்பட்டது.

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 1717 ஜான் சர்மேன் முகலாய மன்னர் பரூக்ஷியாரிடமிருந்து கம்பெனிக்கான வாணிபம் செய்யும் அரசு ஆணையைப்பெற்றார். இது ‘மேக்ன கார்ட்டா ஆப் கம்பெனி’ என அழைக்கப்படுகிறது.

**டேனிஷ்கள்:**

- டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி 1616ல் துவக்கம்.
- இவர்கள் குடியேற்றங்கள் செராம்பூர் (வங்காளம்), டிராங்கூபர் (தரங்கம்பாடி) (தமிழ்நாடு). இவர்கள் சமய பரப்பாளர்கள். தங்கள் குடியேற்றங்களை 1845ல் ஆங்கிலேயர்களுக்கு விற்று விட்டனர்.

**பிரெஞ்சுக்காரர்கள்:**

- பிரான்ஸ் மந்திரி கால்பர்ட்டின் ஆலோசனைப்படி (14ம் லூயி ஆட்சியின் போது) 1664 பிரெஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனி துவங்கப்பட்டது.
- இவர்கள் தங்களது முதல் தொழிற்சாலையை 1668ல் சூரத்திலும், 1669ல் மசூலிப்பட்டினத்திலும் அமைத்தனர்.
- பாண்டிச்சேரி 1674ல் பிரான்சிஸ் மார்ட்டின் என்பவரால் பீஜப்பூர் சுல்தானிடம் புதுச்சேரி என்ற கிராமம் பெறப்பட்டது.
- 1699-ல் புதுச்சேரியை டச்சுக்காரர்கள் கைப்பற்றினர். பின்னர் ரிஸ்விக் உடன்படிக்கையின்படி பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியை திரும்பப் பெற்றனர்.
- 1701-ம் ஆண்டு பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்களின் தலைமையிடமானது.
- 1725-ல் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களிடமிருந்து மலபார் கடற்கரையில் உள்ள மாஹி பகுதியையும் 1739-ல் சோழ மண்டல கடற்கரையில் கரைக்கால் பகுதியையும் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றினர்.

**வங்காளத்தை பிரிட்டீஷார் கைப்பற்றுதல்:**

- முகலாய ஆளுநரான முர்ஷித் குலிகான் வங்காளத்தை சுதந்திர அரசாக மாற்றினார். (1717-1727 முகலாய ஆட்சியின் போது)
- அவரைத் தொடர்ந்து அவரது மகன் சூஜா-உத்-தௌலா 12 வருடங்கள் ஆண்டார்.
- அவரைத் தொடர்ந்து அலிவர்தி கான் 1756 வரை ஆண்டார்.
- இம்மூன்று ஆட்சியாளர்களும் அமைதியான மற்றும் நிர்வாக திறமையுள்ள ஆட்சியை அளித்தனர்.
- அவர்கள் கிழக்கிந்திய கம்பெனியை ஒடுக்கினர். ஆனால் வெளியேற்றவில்லை. மற்றொருபுறம் கம்பெனி ஊழல் செய்யும் அதிகாரிகள் மூலமாக தங்களது

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

அதிகாரத்தை வளர்த்துக் கொண்டது.

- அலிவர்திகானுக்கு அடுத்து ஆண்ட சிராஜ்-உத்-தௌலா 1757-ல் நடந்த பிளாசிப் போரில் தோற்கடிக்கப்பட்டார். நவாப்பினுடைய படை (மீர்ஜாபர் மற்றும் ராய் துர்லாபால் வழிநடத்தப்பட்டவை) சண்டையிடவில்லை. நவாப் தோற்கடிக்கப்பட்டு பின் கொல்லப்பட்டார்.
- பிளாசிப்போர் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட முக்கிய காரணமாக அமைந்தது. இது “பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் ஆரம்ப புள்ளி” எனப்படுகிறது.
- மீர் ஜாபர் அடுத்த நவாப் ஆனார். கம்பெனி தடையற்ற வணிக அதிகாரத்தை பெங்கால், பீஹார் மற்றும் ஒரிஸ்ஸாவில் பெற்றது. அது 24 பர்கானாக்களின் ஜமீன்தார்களை பெற்றுக்கொண்டது.
- அடுத்த வந்த நவாப் மீர் காசிம், இவர் பிரிட்டிஷிற்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டார். ஏனெனில் பிரிட்டிஷ் தஸ்தக்ஸ் என்னும் இலவச முறையை தவறாக பயன்படுத்தியது.
- 1764ல் பக்ஸார் போர் பிரிட்டிஷ் படைகளுக்கும் (மேஜர்மன்றோ தலைமை தாங்கினார்) பெங்கால் நவாப் மீர்காசிம், அயோத்தி நவாப் சூஜா உத்தௌலா மற்றும் முகலாய பேரரசர் ஷா ஆலம் ஆகியோருக்குமிடையே நடைபெற்றது. இப்போரில் வங்காள நவாப் மட்டுமல்ல இந்திய பேரரசரும் தோற்கடிக்கப்பட்டார்.
- 1765ல் அலகாபாத் ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஆங்கிலேயர்கள் திவானி என்னும் வரி வசூலிக்கும் உரிமையை வங்காளத்தில் பெற்றனர். இது ஆங்கிலேயரின் மிகப்பெரிய வெற்றி ஆகும். இரட்டை ஆட்சி முறையில் கம்பெனி உண்மையான அதிகாரத்தைப் பெற்றிருந்தது. ஆனால் பொறுப்பு வங்காள நவாப்பிடமிருந்தது.
- முகலாய பேரரசர் அலகாபாத்தில் சிறை வைக்கப்பட்டார்.
- ராபர்ட் கிளைவ்: இதில் முக்கியப் பங்காற்றினார். இவர் இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு வித்திட்டவர் ஆவர். அவர் இரண்டு முறை வங்காள கவர்னராக (1758-60) இருந்தார். (பின் 1765-67 வரை) இவர் வங்காளத்தை இரட்டை ஆட்சி முறைக்கு உட்படுத்தினார். பின் இங்கிலாந்திற்குத் திரும்பினார். 1774ல் அங்கு தற்கொலை செய்து கொண்டார்.

## வங்காளத்தின் கவர்னல் ஜெனரல்கள்

### வாரன் ஹாஸ்டிங்ஸ்(1772-5):

- இவர் வங்காளத்தின் முதல் கவர்னர் ஜெனரல் ஆவார்.
- வங்காளத்தில் இரட்டை ஆட்சியை 1773 ஒழுங்குமுறை சட்டம் மூலம் முடித்து வைத்தார்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ஜமீன்தார்களின் நீதி, விசாரணை அதிகாரங்களை நீக்கி சிவில் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களை நிறுவினார்.
- கோப்புகள் பராமரிப்பதைக் கட்டாயமாக்கினார்.
- கிழக்கிந்திய கல்வியின் ஆதரவாளர். இவர் வங்காளத்தில் ஆசிய சொசைட்டியை வில்லியம் ஜோன்ஸ் உடன் இணைந்து1784ல் தொடங்கினார். சார்லஸ் வில்கின்ஸ் எழுதி கீதையின் முதல் ஆங்கில மொழி பெயர்ப்பிற்கு முன்னுரை எழுதினார்.
- லஞ்சம் வாங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுப் பதவி நீக்கப்பட்டார். ஏழு வருட விசாரணைக்குப் பிறகு குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார்.
- 1772ல் (கல்கத்தா) முர்ஷிபாத்தில் வருவாய்த்துறையை ஏற்படுத்தினார்.

**கார்ன்வாலிஸ் பிரபு (1786-1793):**

- ஜமீன்தாரி முறையை அமைத்தார். சட்டங்களை வரிசைப்படுத்தினார். அவற்றை வருமானம் மற்றும் நிர்வாகம் எனப்பிரித்து நீதி நிர்வாகத்திலிருந்து விலக்கினார்.
- காவல் சீர்திருத்தம்: காவல் கண்காணிப்பாளர்களுக்கு 400 ச.மைல் தொலைவு எல்லை ஒதுக்கப்பட்டது.
- சிவில் சர்வீஸ் விரிவுபடுத்தப்பட்டது. இவர் இந்திய சிவில் சர்வீஸின் தந்தை எனப்படுகிறார்.
- மூன்றாம் மைசூர் போர் இவரது காலத்தில் நடைபெற்றது.

**சர் ஜான் ஷோர் (1793-98) : -**

**வெல்லெஸ்லி பிரபு (1798-1805):-**

- இந்திய அரசர்களை பிரிட்டீஷின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக துணைப்படைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- இத்திட்டத்தை ஹைதராபாத் நிஜாம், மைசூர் அரசர், தஞ்சாவூர் ராஜா, ஆவாத் நவாப் பிராரின் பேஷ்வா போன்ஸ்லே ராஜா. சிந்தியா, ஜோத்பூர் மற்றும் ஜெய்ப்பூரின் ராஜபுத்திரர்கள் ஆகியோர்கள் ஏற்றுக்கொண்டனர்.
- வங்கப்புலி எனவும் ஆங்கிலக்கிழக்கிந்திய கம்பெனியின் அக்பர் எனவும் அழைக்கப்படுகிறார்.
- 1799ல் நான்காம் மைசூர் போர் நடைபெற்றது.
- பத்திரிக்கை தணிக்கைச் சட்டம் 1799ல் கொண்டுவந்தார்.
- 1800ல் வில்லியம் கோட்டையைக் கட்டினார்.

**ஜார்ஜ் பார்லோ (1805-1807):-**

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 1806ல் வேலூர் கலகம் இவரது காலத்தில் நடைபெற்றது. அப்போதைய மெட்ராஸ் கவர்னர் வில்லியம் பெண்டிங் பிரபு ஆவார்.

## மிண்டோ பிரபு (1807-1813):-

- 1809ல் மஹாராஜா ரஞ்சித்சிங்குடன் ஏற்பட்ட அமிர்தசரஸ் ஒப்பந்தத்தை முறித்தார்.
- 1813ல் ஒழுங்குமுறை சட்டம் இயற்றப்பட்டது. அதில் கல்விக்கென ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

## ஹாஸ்டிங்ஸ் பிரபு (1813-1823):-

- பத்திரிக்கைத் தணிக்கைச் சட்டத்தை நீக்கினார்.
- தாய்மொழிப் பத்திரிக்கைச் சட்டத்தை ஏற்படுத்தினார், முதல் வட்டார மொழிப் பத்திரிக்கை சமாச்சார் தர்பன் பத்திரிக்கை ஆகும்.
- ரயத்வாரி முறையைக் கொண்டுவந்தார்.
- ஹுணர்கள் மற்றும் பிண்டாரிகள் ஒழிக்கப்பட்டனர்.

## அம்ஹெர்ஸ்ட் பிரபு (1823-1828):-

- இவர் கடைசி வங்காள கவர்னர் ஆவார்.

## இந்தியாவின் கவர்னர் ஜெனரல்கள்:

## வில்லியம் பெண்டிங் பிரபு (1828-35):-

- சதி ஒழிப்பு (1829), ரௌடிகளின் ஒழிப்பு (1830) ஆகிய சமுதாய சீர்திருத்தங்களைச் செய்தார். சதி ஒழிப்பிற்கு ராஜாராம் மோகன்ராய் உறுதுணையாக இருந்தார்.
- உயர்நிலைக் கல்வியில் ஆங்கிலத்தை (1835) (மெக்காலேயின் பரிந்துரைப்படி) கொண்டு வந்தார்.
- பெண் சிசுக்கொலை, குழந்தைத் திருமணம் ஆகியவற்றை ஒழித்தார்.
- 1833ல் ஒழுங்குமுறைச் சட்டத்தை நிறைவேற்றினார்.

## சார்லஸ் மெட்கால்.ஃப்(1835-36):-

- பத்திரிக்கை மீதான அனைத்து தடைகளையும் நீக்கினார்.(இவர் பத்தரிக்கைகளின் மீட்பர் என அழைக்கப்படுகிறார்)

## ஆக்லாந்து பிரபு (1836-1842):-

- இவரது பதவிக் காலத்தின் முக்கிய நிகழ்வு முதலாவது ஆப்கானிய போர். இது ஆங்கிலேயர்களுக்கு பேரிழப்பாக அமைந்தது.

## எல்லன்பரோ பிரபு (1842-1844):-

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- சிந்துப் பகுதியை இணைத்தார்.

## ஹார்டிஞ்ச் பிரபு (1844-1848):-

- இவர் காலத்தில் முதல் சீக்கியப்போர் நடந்தது

## டல்ஹவுசி பிரபு (1848-1856):-

- இந்தியாவின் முதல் தொடர்வண்டியை (ரயில்வே) 1853ல் (பம்பாய் முதல் தானே வரை) துவக்கினார்.
- சென்னை மாகாணத்தில் 1856ல் சென்னை முதல் அரக்கோணம் வரையில் ரயில் பாதையை அமைத்தார்.
- 1853ல் தந்தி முறையை அறிமுகப்படுத்தினார்.
  (கல்கத்தாவிலிருந்து ஆக்ரா வரை முதலில் செயல்பட்டது)
- வாரிசு இழப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தி சதாரா (1848), ஜெய்ப்பூர் சம்பல்பூர் (1849), உதய்ப்பூர் (1852), ஜான்ஸி (1853) மற்றும் நாக்பூர் (1854) ஆகியவற்றைக் கைப்பற்றினார்.
- மேம்படுத்தப்பட்ட தபால் முறையை நாடெங்கிலும் அறிமுகப்படுத்தினார்.
- பொதுப் பணித்துறையை உருவாக்கி பல மேம்பாலங்களையும், கிராண்ட் ரோடு பணியையும் துறைமுகங்களை மேம்படுத்தினார்.
- ரூர்க்கியில் பொறியியல் கல்லூரியை துவக்கினார்.
- அறிவியல், காடு வளர்ப்பு, வணிகவியல், சுரங்கவியல் மற்றும் தொழில் துறை ஆகிய துறைகளை ஊக்குவித்தார்.
- 1854ல் உட்ஸ் கொள்கையை அறிமுகப்படுத்தினார். இது தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்வியை இணைத்தது. இந்த சார்லஸ் உட்ஸ் அறிக்கை ஆங்கிலக் கல்வியின் மகாசாசனம் எனப்படுகிறது.
- ஈஸ்வர சந்திர வித்தியாசாகரின் முயற்சியால் 1856ல் விதவை மறுமணத்தை சட்ட பூர்வமாக்கினார்.

## 1857-ஆம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சி(அ)முதல் இந்திய சுதந்திரப் போர்

### 1857 பெருங்கலகம்

- 1857 கிளர்ச்சி "படைவீரர்கள் கிளர்ச்சி" -ஆங்கில வரலாற்று அறிஞர்கள்.
- 1857 புரட்சி இந்திய வரலாற்று அறிஞர்கள் -"முதல் இந்திய சுதந்திரப் போர்"
- 1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது இந்தியாவின் தலைமை ஆளுநர் கானிங் பிரபு ஆவார்.
- புரட்சி தொடக்கம் மே-10 1857
- புரட்சி முடிவு சூன் - 20 1858

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## புரட்சிக்கான காரணங்கள்:

### அரசியல் காரணங்கள்

- ❖ ஆங்கிலேயர்களின் நாடு இணைப்பு கொள்கை: இணைத்துக் கொள்ளப்பட்ட இந்திய அரசுகள் சதாரா, நாக்பூர் மற்றும் அயோத்தி
- ❖ வெல்லெஸ்லி பிரபுவின் துணைபடைத் திட்டம்
- ❖ டல்ஹெளசி பிரபுவின் நாடு இணைக்கும் கொள்கை
- ❖ முகலாய வம்சத்தின் கடைசிப் பேரரசர் இரண்டாம் பகதூர் ஷா அவருக்கு பிறகு அவரின் வாரிசுகள் பரம்பரை அரண்மனை மற்றும் செங்கோட்டையை ஆங்கில அரசிடம் ஒப்படைக்க வற்புறுத்தபட்டனர்.
- ❖ மராட்டிய மன்னர் இரண்டாம் பாஜிராவின் மரணத்திற்கு பிறகு அவரின் வளர்ப்பு மகன் நானா சாகிப்பிற்கு வழங்கப்பட்ட ஓய்வு ஊதியம் நிறுத்தப்பட்டது. இது மராட்டியர்கள் மத்தியில் ஆங்கில அரசின் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது.
- ❖ முஸ்லீம்கள் ஆங்கில அரசின் போக்கில் அதிருப்தி கொண்டனர். ஆங்கிலேயர்கள் அரசியல் அதிகாரத்தை பறித்தனர் என கருதினர்.

### நிர்வாக காரணங்கள்

- ❖ பாரசீக மொழி மாற்றம். ஆங்கில மொழியை புகுத்தியது (நீதிமன்றங்களில்)
- ❖ ஆங்கில நீதி வழங்குமுறை அதிக செலவு உடையது இயந்திரத் தன்மை உடையது, கால விரயம் கொண்டது.
- ❖ ஆங்கில நிர்வாகத்தின் அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தியது நிலவரி முறையாகும். நிலபிரபுக்களால் குடியானவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.
- ❖ இந்தியர்களுக்கு அரசியல் இராணுவத்தில் உயர்பதவி மறுக்கப்பட்டது.

### பொருளாதார காரணங்கள்

- ❖ செல்வம் சுரண்டப்பட்டது. கைத்தொழில் அழிவு, நெசவுதொழில் அழிவு
- ❖ இந்திய பொருள்களுக்கு இங்கிலாந்தில் அதிக காப்புவரி. இந்தியாவில் ஆங்கிலபொருட்களுக்கு குறைந்த இறக்குமதிவரி
- ❖ வேலையில்லா திண்டாட்டம் ஏற்பட்டது (நெசவுத்தொழிலில்)
- ❖ பெண்டிங் பிரபு காலத்தில் கொண்டுவரப்பட்ட வங்காள நில குத்தகைச் சட்டத்தின்படி குத்தகை சுதந்திரம் கொண்ட நிலங்கள் அரசின் கட்டுபாட்டில் கொண்டுவரப்பட்டதால் பலர் வறுமைக்குத் தள்ளப்பட்டனர்
- ❖ 19-ம் நூற்றாண்டின் முதல்பாதியில் தொடர்ந்து ஏற்பட்ட 7-பஞ்சங்கள் பொருளாதார நிலையை பாதித்தது.

### சமூக மற்றும் சமயக் காரணங்கள்

Downloaded from https://t.me/tnpscfree

- இந்தியப்படைவீரர்களுக்கு தங்கள் சமயம் மற்றும் பண்பாட்டு வழக்கப்படி நெற்றியில் திலகமிடல், தாடிவளர்த்தல், தலைப்பாகை அணிதல் ஆகியவற்றிற்கு தடைவிதிக்கப்பட்டது.
- சதி என்னும் உடன்கட்டை ஏறுதல் வழக்கம் ஒழிக்கப்பட்டது பெண்சிசுக்கொலை தடுப்பு, விதவை மறுமணம் சட்டமாக்கப்பட்டது, இந்துக்கள் சொத்துரிமை சட்டம் மாற்றம், கிருத்துவர்களாக மாறியவர்களுக்கு தங்கள் முன்னோர்களின் சொத்தில் பங்குபெறும் உரிமை வழங்கப்பட்டது.
- கோயில் மசூதிகளுக்கு சொந்தமான நிலங்களின் மீது ஆங்கிலேயர் விதித்த வரி மக்களின் சமய உணர்வினை பெரிதும் பாதித்தது.

## இராணுவக் காரணங்கள்

- இராணுவத்தில் இந்தியப்படை வீரர்களுக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த பதவி சுபேதார் ஆகும். இந்த உயர்ந்த பதவிக்கு அளிக்கப்பட்ட ஊதியம் புதிதாக சேர்ந்த ஆங்கில சிப்பாய்களின் ஊதியத்தைவிடக் குறைவாக இருந்தது.
- பதவி உயர்வு இந்திய சிப்பாய்களுக்கு இல்லை. இந்திய சிப்பாய்களுக்கு இழிவாகவும் தாழ்வாகவும் நடத்தப்பட்டனர்.
- 1856 ஆம் ஆண்டு கானிங் பிரபுவின் பொது இராணுவப்படைகள் சட்டம் (The general service enlistment act) - இந்திய சிப்பபாய்கள் கடல் கடந்து சென்று போரில் ஈடுபட வேண்டும்.
- இந்தியப்படை வீரர்கள் எண்ணிக்கை ஆங்கிலப்படை வீரர்களைவிட 5 மடங்கு அதிகம் இருந்தது.
- போர் முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய இடங்களான டெல்லி, அலகாமாபாத் ஆகியவை இந்திய படை வீரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இவை அனைத்தும் இந்திய சிப்பாய்களை ஆங்கில அரசுக்கு எதிராக புரட்சியை செய்ய துாண்டுகோலாக அமைந்தது.

## உடனடிக் காரணம்:

- இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய என்ஃபீல்டு ரக துப்பாக்கியில் கொழுப்பு தடவிய தோட்டாக்கள் (பசுவின் கொழுப்பு, பன்றியின் கொழுப்பு)
- பசு இந்துக்களின் புனிதம் மற்றும் முஸ்லீம்களின் வெறுப்புக்குரிய விலங்கு பன்றி என்பதால், தோட்டாக்கள் உபயோகிப்பது சிப்பாய்கள் தங்களது சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது எனக் கருதினர்.
- 1857 மார்ச் 29 இல் கல்கத்தா அருகில் பராக்பூரில் வங்காளபடை வீரர் மங்கள்பாண்டே (பிராமண இந்தியர்) புதிய என்பீல்டு தோட்டா உபயோகிக்க மறுப்புத் தெரிவித்து, தனது மேலதிகாரியை சுட்டுக்கொன்று எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.
- கைது செய்யப்பட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு துாக்கிலிடப்பட்டார்
- பராக்பூரில் காலாட்படை பிரிவு மீரட்டிற்கு மாற்றப்பட்டது. இச்செய்தி பரவி இந்திய படைவீரர்கள் வெவ்வேறு பகுதிகளில் புரட்சியை தொடங்கினர்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## புரட்சி பரவுதல் மற்றும் அடக்கபடுதல்:

- 1857 இல் வங்காளத்தில் பராக்பூரில் தான் முதலில் புரட்சி வெடித்தது. இப்புரட்சி உடனடியாக அடக்கப்பட்டு புரட்சியாளர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.
- 1857 மே மாதம் மீரட்டிலிருந்து படைவீரர்கள் வெளிப்படையாக புரட்சியில் ஈடுபட்டனர். சிறைச்சாலையை தகர்த்து சகபடைவீரர்களும் விடுவிக்கப்பட்டனர். பின்னர் டெல்லி நோக்கி சென்று டெல்லி கைப்பற்றபட்டது. அதவாது தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.
- சிப்பாய் கலகம் (or) கலவரம் பரவிய இடங்கள் தில்லி, கான்பூர்,லக்னோ,பரேலி, ஜான்சி, பீகார்,பைசாபாத், வங்காளம், பஞ்சாப், ஆக்ரா, பனாரஸ்

| புரட்சி நடந்த பகுதி | | புரட்சிக்கு தலைமை தாங்கியவர்கள் |
|---|---|---|
| கான்பூர் | - | நானசாகிப் |
| டெல்லி | - | இரண்டாம் பகதுார் ஷா |
| லக்னோ | - | அயோத்தி நவாப் மனைவி பேகம் ஹஸ்ரத்மஹால் |
| மத்திய இந்தியா | - | தாந்தியாதோப் |
| ஜான்சி | | இராணி இலட்சிமிபாய். |
| ப்ரெய்லி | - | ரோகில்லர்கள் |
| பீகார் | - | கன்வர்சிங், அமர்சிங் |
| பைசாபாத் | - | மௌலானாஅகமத்துல்லா |
| மதுரா | - | தேவிசிங் |
| மீரட் | - | கதம்சிங் |

**புரட்சி ஒடுக்கியவர்கள்:-**

- டெல்லி – ஜான் நிக்கல்சன் மற்றும் ஹட்சன்
- கான்பூர் - கேம்பெல், ஹேவ்லாக்
- லக்னோ – ஹேவ்லாக், அவுட்ரம், ஜேம்ஸ் நீல் மற்றும் கேம்பெல்
- ஜான்ஸி - ஹக் ரோஸ்
- பனாராஸ் - ஜேம்ஸ் நீல்

- மராத்திய பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் தத்து புதல்வன் நானாசாகிப் கான்பூரில் புரட்சியாளர்களுடன் இணைந்து புரட்சிக்கு தலைமை தாங்கி தன்னை பேஷ்வா என அறிவித்துக் கொண்டார்.
- நானாசாகிப் படைக்கு தாந்தியாதோப் ("படைத்தளபதி") தலைமை பொறுப்பேற்றார்.
- நானாசாகிப் புரட்சியில் தோற்று நேபாளம் தப்பி சென்று அங்கு சிறிது காலத்திற்குப் பிறகு இறந்தார்.
- 1857 நவம்பரில் கான்பூர் ஆங்கிலேயர் கட்டுபாட்டில் வந்தது.
- நானாசாகிப் சர் காலின் காம்பெல்லால் தோற்கடிக்கபட்டார்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ புரட்சியாளர்களிடமிருந்து டெல்லியை மீட்ட ஆங்கில இராணுவ அதிகாரிகள் சர் ஆர்ச்டேல் வில்சன் நிக்கல்சன் மற்றும் சர்ஜான் லாரன்ஸ்.
- ❖ டெல்லியில் புரட்சி ஆங்கிலேயர்களால் அடக்கப்பட்டு இரண்டாம் பகதூர் ஷா சிறைபிடிக்கப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் அங்கு தனது 87 வயதில் இறந்தார்.
- ❖ 1857 புரட்சியின் மையமாக திகழ்ந்த இடம் லக்னோ.
- ❖ தலைமை ஆணையர்களான சர்ஹென்றி லாரான்ஸ் கர்னல் நீல் ஆகியோர் 1857 புரட்சியில் லக்னோவில் கொல்லப்பட்டார்.
- ❖ 1857 புரட்சியில் லக்னோவை மீட்ட ஆங்கிலேயர் சர் காலின் கேம்பெல்
- ❖ மத்திய இந்தியாவில் நடைபெற்ற புரட்சிக்கு ஜான்சி இராணி இலட்சுமிபாய் கான்பூரில் இருந்து வந்த தாந்தியாதோப் ஆகியோர் தலைமை தாங்கினார்.
- ❖ 1857 புரட்சியில் குவாலியரை கைப்பற்றியவர் ஜான்சி ராணி இலட்சுமி பாய்
- ❖ 1857 புரட்சியில் ஆங்கிலேயர்களால் ஜான்சி ராணி இலட்சுமிபாய் 1858ஆம் ஆண்டு ஜீன் மாதம் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார். தப்பி சென்ற தாத்தியா தோப் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.
- ❖ பீகாரில் உள்ள ஜகதீஷ்பூரின் நிலப்பிரபு (80 வயது) கன்வர்சிங் 1858ல் தான் இறக்கும் வரை போரிட்டார்.
- ❖ மேற்கு பீகாரின் மிகச் சிறந்த ராணுவ தளபதி கன்வர்சிங் அவருடைய சகோதரர் அமர்சிங் புரட்சிக்கு தலைமை தாங்கினார். ஆனால் புரட்சி விரைவில் முறியடிக்கப்பட்டது.
- ❖ பெரும்புரட்சியை அடக்க ஆங்கிலேயருக்கு உதவிசெய்த படைப்பிரிவு - கூர்க்கா பிரபு

## 1857 புரட்சி தோல்விக்கான காரணங்கள்:

- ❖ புரட்சியாளர்களிடையே ஒற்றுமையின்மை முதல் மற்றும் முக்கிய காரணம்.
- ❖ புரட்சி நாடு முழுவதும் பரவவில்லை (வட இந்தியா மட்டும்) தென்னிந்தியா, பஞ்சாப், சிந்து மற்றும் இராஜஸ்தான் இப்புரட்சியில் பங்கு பெறவில்லை.
- ❖ குவாலியரின் சிந்தியா, இந்துாரின் ஹோல்கர், ஹைதராபாத் நிஜாம், ஜோத்பூர் ராஜா, போபால் நவாப், பட்டியாலா மன்னர்,பஞ்சாப், சிந்து, நேபாளின் ரானா ஆகியோர் ஆங்கிலேயரை ஆதரித்தனர்.
- ❖ இந்தியாவில் ஜமீன்தார்கள், செல்வந்தர்கள், மன்னர்கள் பங்கு பெறவில்லை.
- ❖ படித்த இந்தியர்கள் ஆதரிக்கவில்லை, தபால், தந்தி ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் இருந்தது,
- ❖ நவீன போர்க்கருவி புரட்சியாளர்களிடம் இல்லை.
- ❖ நானா, தோப், ராணி ஆகியோர் ஆங்கில படைத்தளபதிகளுக்கு ஈடானவர்கள் அல்ல.
- ❖ 1857 மே, 31ம் நாள் திட்டமிட்ட புரட்சி முன்னதாக தொடங்கப்பட்டது. தோல்விக்கு வழிவகுத்தது.

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- புரட்சியாளர்களிடம் திட்டமிட்ட பயிற்சி இல்லை. தியாகம், வீரம் மட்டுமே இருந்தது. தலைமையேற்றி நடந்தி செல்லுதல் வீரர்களை கட்டுப்பாட்டில் வைத்தல் இல்லை.
- புரட்சியாளர்களிடம் ஒருமித்த குறிக்கோள் இல்லை உ.ம் இஸ்லாமியர்கள் முகலாய அரசை மீண்டும் ஏற்படுத்த எண்ணினர். இந்துகள் மராத்திய செல்வாக்கை மீண்டும் நிறுவ முயற்சித்தனர்.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாலும் சூழ்ச்சி.

## 1857 புரட்சிக்கான விளைவுகள்:

- வணிகக்குழு ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்ஸபெனியிடமிருந்து இந்தியாவை ஆளும் உரிமையை மாற்றி பிரிட்டிஸ் மகாராணியின் நேரடி பிரதிநிதி மூலம் இந்தியாவை ஆளும் உரிமையை ஏற்படுத்தியது.
- 1858 சிறப்பு சட்டம் Board of control, Board of Directors கலைக்கப்பட்டது. (கட்டுபாட்டுகுழு, இயக்குநர்குழு) இதற்கு பதில் நிர்வாக பொறுப்பை கவனிக்க இந்திய செயலாளரும் அவருக்கு உதவியாக 15 உறுப்பினர் குழு அமைக்கப்பட்டது.
- இந்திய தலைமை ஆளுநர் வைஸ்ராய் (அரசு பிரதிநிதி) என அழைக்கப்பட்டார்.
- இந்திய மன்னர்களுக்கு தத்து எடுக்கும் உரிமை வழங்கப்பட்டது, இந்திய அரசு இணைக்கும் கொள்கை கைவிடப்பட்டது. இராணுவம் மாற்றியமைப்பு.
- இந்திய பழக்கவழக்கம் மதிக்கப்படுதல் என உறுதியளிப்பு தகுதி, திறமை, அடிப்படையில் அரசு பணி வழங்குதல்.
- இராணுவத்தில் ஆங்கிலேயர் எண்ணிக்கை அதிகப்படுத்துதல் பீரங்கி படை ஆங்கிலேயர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- இந்தியாவின் சுதந்திரம் பெறுவதற்கான விதை இப்புரட்சியில் விதைக்கப்பட்டது.
- விக்டோரியா மகாராணி பேரறிக்கை 1858 நவம்பர் 1 அலகாபாத்தில் வெளியிடப்பட்டது. (மகாசாசனம்) உரிமை சாசனம்.
- இந்தியாவில் கடைசி தலைமை ஆளுநர், முதலாம் வைசிராய் கானிங்பிரபு.
- ஆட்சி வசதிக்காக இந்தியா வங்காளம், பம்பாய், மெட்ராஸ் மகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. வாரிசு உரிமை மன்னர்களுக்கு திரும்ப வழங்கப்பட்டது.

## <u>19ம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள்:</u>

- சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| i) | பிரம்ம சமாஜம் | 1828 | இராஜாராம் மோகன்ராய் | வங்காளம் |
| ii) | பிரார்த்தனா சமாஜம் | 1867 | டாக்டர்.ஆத்மராம்பாண்டுரங் | மும்பை |

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

| | | | | |
|---|---|---|---|---|
| iii) | பிரம்மஞானசபை | 1875 | பிளாவட்ஸ்கி(ரஷ்யா) ஹென்றி எஸ் ஆல்காட் | USA (நியூயார்க்) |
| iv) | ஆரிய சமாஜம் | 1875 | சுவாமிதயானந்த சரஸ்வதி | குஜராத்(மூர்வி) |
| v) | இராமகிருஷ்ண இயக்கம் | 1897, மே-1 | சுவாமி விவேகானந்தர் | கொல்கத்தா (வங்காளம்) |
| vi) | சமரச சுத்த சன்மார்க்க சங்கம் | 1865 | வள்ளலார் - இராமலிங்க அடிகளார் | சிதம்பரம் (மருதூர்) |
| vii) | அலிகார் இயக்கம் | 1875 | சர்சையது அகமதுகான் | (காசிபூர் அலிகார்) |
| viii) | தர்மபரிபாலனயோகம் | 1903 | ஸ்ரீநாராயணகுரு | கேரளா |
| ix) | சத்திய சோதக் சமாஜ் | 1873 | ஜோதிபாபூலே | |

- இந்திய சீர்திருத்தங்களின் முன்னோடி - இராஜாராம் மோகன்ராய்.
- இவர் 1815ல் ஆத்மிய சபாவைத் தொடங்கினார். ஆத்மியா சபா பின்னாளில்– 1828ல் பிரம்மசமாஜமாக மாறியது.
- ராஜாராம் கற்ற மொழிகள் - அராபிக், சமஸ்கிருதம், ஹீப்ரு, பாரசீகம், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தின், கிரேக்கம்
- ராஜாராம் , வங்காளம், இந்தி, பாரசீகம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூல்களை எழுதினார்.
- ராஜாராம் எழுதிய நூல்கள் - ஏசு கிருஸ்துவின் கட்டளைகள், (Precepts of Jesus christ) அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி (The guide to peace and happiness)
- முகலாய மன்னர் அக்பர்II-க்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வு ஊதியத்தை உயர்த்தி பெற இராஜாராம் மோகன்ராய் இங்கிலாந்து சென்றார்.
- ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தில் இராஜாராம் மோகன்ராய் பணியாற்றிய காலம்?

  1805 முதல் 1814 வரை
- 1833ல் இராஜாராம் மோகன்ராய் இறந்த இடம் - பிரிஸ்டல்
- இராஜாராம் மோகன்ராய்க்கு இராஜா என்ற பட்டத்தை வழங்கியவர் முகலாய மன்னர் இரண்டாம் அக்பர்
- நவீன இந்தியாவின் விடிவெள்ளி என அழைக்கப்படுபவர் - இராஜாராம் மோகன்ராய் (Herald of New Age of India)
- ஆத்மியா சபா பின்னாளில்– 1828ல் பிரம்மசமாஜமாக
- பிரம்ம சமாஜத்தின் கொள்கை எது? ஒரே கடவுள்
- ஒரே கடவுள், பொது சமயத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் சபை எது?
- பிரம்ம சமாஜம்
- ராஜாராமின் பிரம்மசமாஜம் வலியுறுத்தியது எது?
- உருவ வழிபாடு, ஆடம்பர சடங்கு, சமயவிதி, சாதி வேறுபாடு, தீண்டாமை, உடன்கட்டை ஆகியவைகளை வன்மையாக எதிர்ப்பது ஆகும்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ சதி உடன்கட்டை ஏறும் பழக்கம் தண்டனைக்குரிய சட்டமாக இயற்றியவர் யார்? எந்த ஆண்டு (அல்லது) சதி திட்டத்தை கொண்டு வந்தவர் யார்?
- ❖ ஆங்கில தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 1829
- ❖ பலதார மணம், குழந்தை திருமணம் எதிர்ப்பு, விதவை மறுமணம், பெண்கல்வி, கலப்பு மணம், பெண்கள் முன்னேற்றம் ஆதரித்தவர் - ராஜாராம் மோகன்ராய்
- ❖ இராஜாராம் மோகன்ராய்க்கு பிறகு அவரின் பிரம்மசமாஜத்தின் சபையை வழிநடத்தியவர்கள் யார்?
- ❖ கேசப் சந்திராசென் மற்றும் தேவேந்திரநாத் தாகூர் (ரவீந்திரநாத் தாகூரின் தந்தை)
- ❖ தாகூரின் அமைப்பு தத்துவ போதனை சபை மற்றும் ஆதி பிரம்ம சமாஜம் என அழைக்கப்பட்டது.
- ❖ கேசப் - சங்கீத சபை பிராத்தனை சமாஜம் மற்றும் பிரம்ம சமாஜம் (இந்தியா)
- ❖ ஆனந்த மோகன் போஸ் - சாதாரண பிரம்ம சமாஜத்தைத் துவக்கினார்
- ❖ பலதார மணம், குழந்தை திருமணம் தடை சட்டம் கொண்டு வந்த ஆண்டு எது?
- ❖ 1872 (கேசவ் சந்திராசென் முயற்சி) இச்சட்டம் கலப்பு மணம், விதவை மணம் ஆகியவை ஆதரித்தது.
- ❖ சமபந்தி உணவு, கலப்பு மணம், விதவை மணம், பெண்கள் நலன், பின்தங்கிய மக்கள் நலன், பர்தா எதிர்ப்பு, குழந்தைத் திருமண எதிர்ப்பு ஆகியவை பிரார்த்தனா சமாஜத்தின் குறிக்கோள்கள் ஆகும்.
- ❖ தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனாதை இல்லங்கள், இரவு பள்ளிகள் பாதுகாப்பு இல்லங்களை தந்த சபை – பிரார்த்தனா சபை.
- ❖ பிரார்த்தனா சபாவின் முன்னேற்றத்திற்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் யார்? மகாதேவ கோவிந்த ரானடே
- ❖ சுவாமி தயானந்த சரஸ்வதி பிறந்த இடம் - மூர்வி
- ❖ சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற்பெயர் - மூல் சங்கர்
- ❖ சுவாமி விராஜனந்தரின் சீடர் - சுவாமி தயானந்தர் சரஸ்வதி
- ❖ வேதங்களை பரப்புவதில் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் - சுவாமி தயானந்த சரஸ்வதி
- ❖ சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களுடைய குறிக்கோள் - Go back to the vedas வேதங்களை நோக்கி செல்
- ❖ மக்களின் சுயமரியாதை, தன்னம்பிக்கை வளர்த்தல், உருவ வழிபாடு எதிர்ப்பு, விலங்குபலியிடுதல், மூடப்பழக்கம், சொர்க்கம், நரக கோட்பாடு ஆகியவைகளின் எதிர்ப்பு ஆரிய சமாஜம் ஆகும்.
- ❖ சுத்தி இயக்கம் தொடங்கியவர் - சுவாமி தயானந்த சரஸ்வதி
- ❖ வேதம் மற்றும் ஆங்கில வழிக் கல்வியை பயில D.A.V ஆங்கிலோ வேத பள்ளியை தொடங்கியவர் - சுவாமி தயானந்த சரஸ்வதி
- ❖ தயானந்த சரஸ்வதியின் முக்கிய சீடர்கள் யார்? ஆரிய சமாஜக்கொள்கையை பரப்பியவர் யார்? லாலாலஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ், பண்டிதகுருதத்.

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- வேத பாஷ்ய பூமியர் நூலையும், வேத பாஷ்யாவையும் எழுதினார்.
- ஆரிய சமாஜ தத்துவம், கோட்பாடுகளின் ஆர்வம் ஈடுபாடு உடையவர்கள் யார்?
- கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர்.
- சுதேசி, இந்தியா இந்தியருக்கே முழக்கங்களை முதன்முதலில் முழங்கியவர் சுவாமி தயானந்தர் சரஸ்வதி
- இந்து சமயத்தின் மார்டின் லூதர் - சுவாமி தயானந்தர் சரஸ்வதி
- கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவை பெறுவதற்கான சபை - பிரம்மஞான சபை (தியோசோபிகள்)
- தியோ என்றால் கடவுள், சோபாஸ் என்றால் அறிவு என பொருள்படும்
- தியோசோபி என்பது கடவுள் பற்றிய அறிவு
- தியோசோபி கொள்கைகள் யாது? சகோதரத்துவம், பண்டைய சமயம் பற்றிய அறிவு, தத்துவம், அறிவியல் இயற்கை நியதி, தெய்வீக சக்தி ஆகியவற்றை வளர்ப்பது தியோசோபிகள் நோக்கம்.
- தியோசோபிகள் சொசைட்டியில் 1893ம் ஆண்டு தலைவராக பொறுப்பு ஏற்றவர்? திருமதி அன்னிபெசன்ட்
- இந்திய கல்வி, இந்து சமய மறுமலர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்தவர் - அன்னிபெசன்ட்
- காசி பனாரசில் மத்திய இந்துக் கல்லூரி தோற்றுவித்தவர்?
  திருமதி அன்னிபெசன்ட்
- மத்திய இந்து கல்லூரி தற்போது பனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சி அடைந்துள்ளது

**பிரம்மஞான சபை**

- இந்திய கலாச்சராத்தினால் ஈர்க்கப்பட்ட மேற்கத்தியர்களால் துவங்கப்பட்டது.
- மேடம் H.P. பிளவாட்ஸ்கீ - 1875 அமெரிக்காவில் ஏற்படுத்தினார். பின் அமெரிக்க ராணுவத்தின் M.S. ஆல்காட் அவருடன் இணைந்தார்.
- 1882ல் இது தமிழ்நாட்டிலுள்ள அடையாறுக்கு இடம் மாற்றப்பட்டது.
- அன்னிபெசன்ட் 1907ல் இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1898ல் மத்திய இந்துக் கல்லூரியைத் தொடங்கினார். 1916ல் பணாராஸ் இந்துக் கல்லூரியாக மாறியது.
- பிரம்மஞான சபை பரப்ப அன்னிபெசன்ட் நடத்திய செய்தி தாள் எது?
  நியூ இந்தியா (New India)
- இந்திய அரசியிலில் இந்தியர்கள் சுயாட்சி பெற (Home Rule Movement) தன்னாட்சி இயக்கத்தை உருவாக்கியவர்?
  திருமதி அன்னிபெசன்ட்
- தன்னாட்சி இயக்கத்தின் தலைமை இடம் எது?
  சென்னை அடையார்.
- அடையாரில் நூலகத்தை நிறுவி அதில் சமஸ்கிருத நூல்களை பாதுகாத்து வந்தவர்? திருமதி அன்னிபெசன்ட்

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இந்தியர்களின் மறுமலர்ச்சிக்காக ஓர் முன்னோடி இயக்கமாக செயல்பட்ட சபை-தியோசோபிகள் சபை
- இராமகிருஷ்ணமடம் 1897ல் கொல்கத்தா அருகில் உள்ள பேலூரில் சுவாமி விவேகானந்தாரால் நிறுவப்பட்டது.
- விவேகானந்தர் 1893ல் சிகாகோவில் நடைபெற்ந உலக சமய மாநாட்டில் இரு உரைகளை நிகழ்த்தினார்: பிரபுத பாரத் (ஆங்கிலம் மற்றும் உத்போதனா (வங்கமொழி).
- துவக்கக்கல்வி, உயர்கல்வி, கிராமமுன்னேற்றம், உடல்நலம், பேரழிவு நிவாரணம், ஆதிவாசிகள் நலன், கலாச்சார முன்னேற்றம் ஆகியவை இராமகிருஷ்ணபரமஹம்ச இயக்கத்தின் குறிக்கோள்கள்.
- கடவுள் ஒருவரே என்ற கொள்கையும், மனிதனுக்குச் செய்யும் பணி கடவுளுக்கு செய்யும் பணி என கூறியவர் - இராமகிருஷ்ணபரமஹம்சர்
- துறத்தல் மற்றும் சேவை இரண்டும் நவீன இந்தியாவின் இரண்டு கொள்கை என கூறி உரைத்தவர் - சுவாமி விவேகானந்தர்.
- மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனபகுதியில் சூரிய ஒளியை பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் (Photo voltaic (P.V) Lighting System) தோன்ற முக்கிய பங்கு வகித்து வந்த இயக்கம் இராமகிருஷ்ண இயக்கம்.
- ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரக் குழுவின் (UNESCO) தலைமை இயக்குநர் பெடரிக்கோ மேயர் (Federico Mayor) 1993ம் ஆண்டில் சொற்பொழிவு ஆற்றும் பொழுது 1897ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண இயக்கத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் 1945ல் ஏற்படுத்தப்பட்ட யுனஸ்கோவின் அமைப்பை போன்றே இருப்பதால்தான் மிகவும் ஈர்க்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## இளைய வங்காள இயக்கம்:-

1820 பின்பகுதி மற்றும் 1830ன் முன்பகுதியில் படிப்பறிவுள்ள வங்காள இளம் சமூகத்தினடையே மதவழக்கங்கள் பிரபலமாயின. இவை இளைய வங்காள இயக்கம் எனப்படுகிறது.

- இது ஹென்றி லூயிஸ் விவிலியன் டேரேஸியோவால் (1830 – 31) தோற்றுவிக்கப்பட்டது. இவர் கல்கத்தா இந்துக் கல்லூரியின் ஆசிரியராவார்.
- இவர் ஹெஸ்பெரஸ், கல்கத்தா இலக்கிய கெசட் ஆசிரியராகப் பணியாற்றினார். அத்துடன் இந்தியா கெசட் பத்திரிக்கையுடன் தொடர்பு வைத்திருந்தார்.

## வேதசமாஜம்:

- தெற்கின் பிரம்மசமாஜம் என அழைக்கப்படுகிறது இதனை ஸ்ரீதரலூ நாயுடு தொடங்கினார்.
- இவர் பிரம்ம தர்மா என்னும் நூலை தமிழ் மற்றும் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**தர்ம சபை:-**

- ராதாகாந்த் என்பவரால் செப்டம்பர் 1830ல் துவங்கப்பட்டது.
- சீர்திருத்தங்களை எதிர்க்கவும், மதிப் பண்பாட்டு முறைகளைக் காப்பாற்றவும் துவங்கப்பட்டது. ஆனால் இது பெண்களுக்கு மேற்கத்தியக் கல்வியை அளிப்பதை ஆதரித்தது.

**லோககிதவாடி:-**

- கோபால் ஹரி தேஸ்முக் என்பவரால் துவக்கப்பட்டது. மேற்கத்தியக் கல்வி மற்றும் பகுத்தறிவை வலியுறுத்தியது. இவர் பெண்கல்வியை ( பெண்களின் முன்னேற்றத்தை) ஆதரித்தார்.
- 1876ல் டெல்லி தர்பாரில் பங்கு கொண்டார். அதில் கையினால் நூற்கப்பட்ட கதராடை அணிந்து கொண்டார்.
- நாட்டின் சுய சார்பினை ஆதரித்தார்.

**இந்திய சமூகத்தின் சேவர்கள் அமைப்பு:-**

- கோபாலகிருஷ்ண கோகலேயால் 1915ல் துவங்கப்பட்டது.
- இது வறட்சி பாதிப்பு நிவாரணம் மற்றும் மலைவாழ் மக்களின் தரத்தினை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றியது.

**இராதாசுவாமி இயக்கம்:-**

- இது ஆக்ராவில் வங்கி நடத்திய துளசிராம் ( சிவா தயாள் சாகிப் அல்லது சுவாமி மஹாராஜ்) என்பவரால் 1861ல் துவங்கப்பட்டது.
- இவர்கள் ஒருவரே கடவுள் என்னும் கொள்கையைக் கொண்டிருந்தனர். குரு மேன்மையானவர் எனவும் சிஷ்யர்கள் (சத்சங்கிகள்) எளிமையான வாழ்வு வாழவும் போதித்தார்.

**அலிகார் இயக்கம்:-**

- அலிகார் இயக்கத்தை தோற்றுவித்தவர் சர்சையது அகமதுகான் (நீதித்துறை அலுவலர்)
- இவ்வியக்கம் மேற்கத்திய கல்வியை முஸ்லீம் சமுதாயத்துடன் புகுத்தி அவர்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வழி செய்தது.
- நவீன கல்வி, சமூக சீர்திருத்தம், பர்தா எதிர்ப்பு, பெண் கல்வி, இந்து முஸ்லீம் ஒற்றுமை –அலிகார் இயக்க நோக்கங்கள்.
- 1875ல் அலிகார் பள்ளியை நிறுவினார். பின்னர் 1877 ல் இப்பள்ளி முகமதியன் ஆங்கிலோ கிழக்கிந்திய கல்லூரியாக வளர்ச்சி பெற்றது. பின்னர் இக்கல்லூரி அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகமாக மாறியது.
- Scientific Society அறிவியல் கழகம் யாரால் எப்போது எங்கு நிறுவப்பட்டது? சர்சையது அகமதுகான்,1864ல் காசிப்பூர் என்னும் இடத்தில் நிறுவப்பட்ட பள்ளி பின்னர் Scientific Society ஆகும்.
- அறிவியல் கழகம் அறிவியல் நூல்களை எந்த மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டது – உருதுமொழி

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 1875ல் அலிகாரில் சர்சையது அகமதுகானால் தோற்றுவிக்கப்பட்ட கல்லூரி எது? MAO முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி
- சர்சையது அகமதுகான் தொடங்கிய இயக்கம் எது? அலிகார் இயக்கம்
- முஸ்லிம்களிடையே தன்னுடைய சீர்திருத்த கொள்கைகளை பரப்ப சர் சையது அகமது கான் நடத்திய பத்திரிக்கை – தாசில் - உத் - அத்லக்
- முகம்மதியர் இலக்கியக் கழகத்தை நவாப் அப்துல் லத்தீப் ஆரம்பித்தார்.
- பண்டைய இந்திய இலக்கியங்களைக் கற்ற புகழ்மிக்க மேல்நாட்டு அறிஞர்கள் மாக்ஸ்முல்லர் வில்லியம் ஜோன்ஸ்.
- இந்துக்களும், முஸ்லீம்களும் இந்தியா என்கின்ற அழகிய பறவையின் இரு கண்கள் என கூறியவர் - சர் சையது அகமதுகான்
- 1873ல் சத்திய சோதக் சமாஜ் (உண்மை தேடுவோர் சங்கம்) அமைப்பை ஏற்படுத்தியவர் - ஜோதி பாபூலே.
- சோதக் சபையின் நோக்கம் - பிராமணர்பிடியில் தாழ்த்தப்பட்டோர் நிலையை மேம்படுத்துதல்
- இவரது நூல்களான “குலாம்கிரி” மற்றும் “சர்வஜைனிக் சதியதர்ம புத்தகம்” ஆகியவை வழக்கமான பூஜைமுறைகளையும் மத நம்பிக்கைகளையும் சாடுகின்றன.
- தாழ்த்தப்பட்டோரின் நிலையை மேம்படுத்த தன் வீட்டின் அருகில் குளம் அமைத்து தாழ்த்தப்பட்டோர் நீர் எடுத்து பயன்படுத்த செய்தவர் ஜோதிபாபூலே.
- கேரளத்தில் ஈழவ மக்களின் சமூக பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கு ஓர் இயக்கத்தை ஏற்படுத்தியவர் யார்? இயக்கத்தின் பெயர் என்ன? எந்த வருடம்? ஸ்ரீ நாராயண குரு – தர்ம பரிபாலனயோகம் - 1903.
- விலங்குகளை பலி கொடுத்தல், சாதி வேறுபாடு, தீண்டாமை கண்டித்தவர் - நாராயண குரு
- தென்னிந்தியாவில் தோன்றிய மாபெரும் சீர்திருத்தவாதிகளில் ஒருவர் - ஈ.வெ.ராமசாமி
- சமூக சமய சீர்த்திருத்த இயக்கத்தின் விளைவு யாது?
    - சமூக கொடுமை (சதி தீண்டாமை) ஒழிய உதவியது
    - பெண் முன்னேற்றம்
    - தேசிய உணர்வு பெருகியது
    - கலாச்சாரம் பெருமைகள் தெரியவந்தது.
    - அறிவியல், நேர்மை வழியில் பிரச்சனைக்கு தீர்வு காண செய்தது.

## இந்திய விடுதலை இயக்கம் - (கி.பி.1885 – 1947)

- **மிதவாதிகள் காலம்** : 1985-1905
- **தீவிரவாதிகள் காலம்** : 1905–1919
- **காந்தியகாலம்** : 1919-1947

## இந்தியாவில் விடுதலை இயக்கம் தோற்றம்:

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இந்தியர்களுக்கு பல்வேறு உயர்பதவிகள் அளிக்கும் பொருட்டு வழங்கப்பட்ட சாசனங்கள்: சாசனம் 1833 மற்றும் 1853
- சாசனம் 1833, 1853 நிறைவேற்றப்படவில்லை. எந்த இந்தியருக்கும் உயர்பதவி வழங்கப்படவில்லை.
- ஐ.சி.எஸ். தேர்வில் வெற்றிபெற்ற முதல் இந்தியர் சுரேந்திரநாத் பானர்ஜி. 1876ல் கல்கத்தா இந்தியச் சங்கம் நிறுவினார். 1877ல் ஐ.சி.எஸ். பதவிக்கான வயது வரம்பு 21-ல் 19ஆக குறைக்கப்பட்டது. வயது வரம்பு குறைவு எதிர்த்து லால் மோகன் கோஸ் என்ற வழக்கறிஞர் இங்கிலாந்து சென்று வாதாடினார்.
- 1878ல் வந்த ஆயுத சட்டம், பிராந்திய மொழி தடைச் சட்டம் தேசிய உணர்வை ஏற்படுத்தியது.
- 1884-ல் இந்தியன் நேசனல் யூனியன் என்றும் பெயர் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் பின்னர் 1885 டிசம்பர் 28-ல் தேசிய காங்கிரஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1885ல் ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான ஆலன் ஆக்டேவியன் ஹுயூம் ஆலோசனையின் பேரில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. இவர் எழுதிய நூல் முதியவரின் நம்பிக்கை.
- INC - ன் முதல் கூட்டம் (இந்திய தேசிய காங்கிரஸ்) நடந்த இடம் - மும்பை - கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருத கல்லூரி
- INC – ன் முதல் கூட்டத்தில் தலைமை வகித்தவர் W.C. பானர்ஜி வைஸ்ராயாக இருந்தவர் டப்ரின் பிரபு.
- INC – ன் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை எவ்வளவு – 72.
- இந்திய தேசிய காங்கிரஸ் என்ற பெயரை பரிந்துரைத்தவர் தாதாபாய்நௌரோஜி ஆவார்.
- 1905-ல் கோபால கிருஷ்ண கோகலே தலைவராக INC(Indian National Congress) பனாரஸில் கூடியபோது சுதேசி முழக்கம் ஒலித்தது.
- காங்கிரஸின் முதல் முஸ்லீம் தலைவர் பக்ரூதின் தியாப்ஜி.
- INC-ன் முதல் பெண் தலைவர் அன்னிபெசன்ட்
- INC-ன் முதல் இந்திய பெண் தலைவர் சரோஜினி நாயுடு
- INC-ல் காந்திஜி ஒரே ஒரு முறை மட்டுமே தலைமை பொறுப்பு வகித்தார் 1924 பெல்கம்.
- 1947-ல் INC-ன் தலைவர் ஆச்சார்ய கிருபாளினி
- INC – ன் முதல் கூட்டத்தில் பிரதிநிதிகளாக கலந்து கொண்ட தலைவர்கள் யார்?
- தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, மதன் மோகன் மாளவியா, எம்.ஜி.ரானடே, பெரோசாமேத்தா, கோபால கிருஷ்ண கோகலே, ஜி.சுப்பிரமணி அய்யர்.
- **இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள்:**
- சட்டமன்றங்கள் விரிவாக்கம், சட்டமன்றத்தில் அதிகப்படியான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் எனும் கோரிக்கை
- கல்வியை பரப்ப நடவடிக்கை வேண்டும்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- பத்திரிக்கை சுதந்திரம் வேண்டும்
- இந்திய நிர்வாக பணிகளை (ICS) இந்தியாவில் நடத்துதல் வேண்டும்.
- இராணுவ செலவுகளை குறைக்க வேண்டும்.
- வரிமுறை எளிமைப்படுத்த வேண்டும்.
- இந்தியர்களுக்கு உயர்பதவி வழங்கிட வேண்டும்.
- இலண்டனில் உள்ள இந்தியன் கவுன்சில் (சபை) கலைக்கப்பட வேண்டும்.

## மிதவாதிகள்

- துவக்க காலத்தில் காங்கிரசை வழிநடத்திய தலைவர்கள் மிதவாதிகள் எனப்பட்டனர். தாதாபாய்நௌரோஜி, பிரோஸ் ஷா மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி, கோபாலகிருஷ்ண கோகலே ஆகியோர் மிதவாதிகள் ஆவர்.

- மிதவாதிகளின் செயல்பாடுகள் பிரார்த்தனை, கோரிக்கை, போராட்டம் என்ற மூன்று தளங்களில் இயங்கியது.

- காந்திஜியின் தேசிய குரு கோபாலகிருஷ்ண கோகலே இவர் மிதவாதிகளின் தலைவர், இவர் 1905-ல் பாரத் சேவா சங்கம் நிறுவினார். மஹாராஷ்டிராவில் சாக்ரட்டீஸ் என பாராட்டப்பட்டவர். இந்தியாவின் இரத்தினம் என திலகரால் புகழப்பட்டார்.

## தீவிரவாதிகள்:

- தீவிரவாத அணுகு முறையில் இப்பிரிவின் பிரதிநிதிகளாக வங்காளத்து ராஜநாராயண போஸ் மற்றும் மகாராஷ்டிரத்தில் விஷ்ணுசாஸ்திரி சிப்லங்கர் ஆவர்.
- பிற்பாடு இவ்வியக்கத்திற்கு உத்வேகமூட்டியவர் பாலகங்காதர திலகர் ஆவார். பாலகங்காதர திலகர் (தீவிரவாதிகளின் தலைவர்), பிபின் சந்திரபோஸ்,லாலா லஜபதி ராய் ,அரபிந்தோகோஷ்.
- புரட்சிகர எண்ணங்கள் கொண்ட இளைஞர்கள் தொடங்கிய இயக்கங்கள் நாட்டில் தீவிரவாத எண்ணங்கள் ஆகும். பம்பாயின் வாசுதேவ்பல்வத் பாட்கே என்பவர்தான் தீவிரவாத இயக்கத்தின் முதல் தலைவர் ஆவர்.
- விநாயக் தாமோதர் சவார்கர் புனேவில் அபிநவபாரதி என்ற அமைப்பை ஆரம்பித்தார்.
- வங்காளத்தில் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர்கள் பி.கே. கோஷ், பி.என். தத்.
- லண்டனில் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர் எஸ்.கே. வர்மா.
- பாரிஸில் தீவிரவாதிகளின் தலைவராக இருந்தவர் எஸ்.ஆர். ராமா.

## பயங்கரவாதிகள்:

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 1924-ல் கான்பூரில் இந்திய புரட்சியாளர்கள் ஒன்று கூடினர். இதை தொடர்ந்து இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்ளிக்கள் அசோசியோசன் (HSRA) என்ற அமைப்பு புதிதாக செயல்படத் தொடங்கியது.

- லாகூரில் சதிவழக்கின் மூலம் பகத்சிங், சுகதேவ் ராஜ்குரு ஆகியோர் 1931 மார்ச் 3-ல் தூக்கிலிடப்பட்டனர்.
- சட்டகாங்கில் பிரிட்டிஸ் ஆயுத சாலை கையகப்படுத்திய போராளி சூரிய சென் தூக்கிலிடப்பட்டார்.
- அலிபூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டு பின் ஆன்மிகவாதியாக மாறிய புரட்சியாளர் அரவிந்த கோஷ் பாண்டிச்சேரியில் ஆஸ்ரமம் ஆரோவில் நிறுவினார்.
- இந்திய மூவர்ணக்கொடி உயர்த்தப்பட்டு நடைபெற்ற முதல் தேசிய மாநாடு ஜெர்மனியில் ஸ்டுவிகார்ட் நகரில் 1907-ல் நடைபெற்றது. இந்திய புரட்சி வாதியர்கள் அன்னை என்று அழைக்கப்பட்ட மேடம் பிக்காஜி காமாவே அன்று மூவர்ணக் கொடி ஏற்றினார்.
- காங்கிரஸ் தீவரவாதி திலகர் நடத்திய இரண்டு பத்திரிக்கைகள் மராத்தா(ஆங்கிலம்), கேசரி (மராத்தி).
- இந்திய குழப்பங்களின் தந்தை திலகர் (Father) of Indian Unrest) என கூறியவர் ஆங்கில எழுத்தாளர் ஸர் வாலன்டைன் ஆவார்.
- லோகமான்யர் என இந்தியர்களால் அழைக்கப்பட்டவர் திலகர்.
- திலகர் சிறைவாசத்தின்போது (பர்மா மாண்டேலாவில் எழுதிய நூல் கீதா ரகசியம்.
- சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் என்று முழங்கியவர் - திலகர்.
- கணபதி மற்றும் சிவாஜி பண்டிகைகள் மூலம் தேசிய உணர்வை தூண்டியவர் - திலகர்.
- INC–ன் தலைமை பதவி வகிக்காத ஒரே இந்திய தலைவர் திலகர் ஆவார்.
- 1905 அக்டோபர் 16-ம் நாள் வங்காளப் பிரிவினை நடைமுறைக்கு வந்தது பிரிவினையின்போது இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய பாடல் அமா சோனார் பங்காள (1971-ல் பிரிவினைக்கு பின் வங்காளத்தின் தேசிய பாடலாக தேர்வு செய்யப்பட்டது).
- வங்க பிரிவினைக்கு எதிராக போராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர் சுரேந்திரநாத் பானர்ஜி ஆவார். பிரிவினை காரணமாக இந்திய பொருட்களால் பயன்படுத்தி வங்காளத்தில் பிரிட்டிஸ் பொருட்கள் நிராகரிக்கப்பட்டன.
- பிரிட்டிசாரின் பிரித்தாளும் தந்திரத்தின் காரணமாக 1906-ல் அகில இந்திய முஸ்லீம் லீக் உருவானது. இதன் முதல் மாநாடு 1906 டிசம்பர் 30-ல் நவாப் சலீமுல்லா தலைமையில் டாக்காவில் நடைபெற்றது.
- 1907-ல் சூரத்தில் நடைபெற்ற INC கூட்டத்தில் டாக்டர் ராஷ்பிகாரி போஸ் தலைமையில் கூடியபோது காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. கட்சியின் நிர்வாகம் மிதவாதிகளின் பிடியில் சென்றது.
- ஜெனரல் டயர் இராணுவ கமாண்டர் தலைமையில் கூட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்தி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். (இதை நியாயப்படுத்திய

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

முன்னாள் லெப்டினன்ட் கவர்னர் சர் மைக்கேல் டயர் 21 வருடங்களுக்கு பிறகு 1940-ல் லண்டனில் உத்தம்சிங் துப்பாக்கியில் சுட்டுக்கொன்றார்)

- 1911-ல் டிசம்பரில் தில்லியில் நடைபெற்ற ராஜா தர்பாரில் பிரிட்டன் மன்னர் 5-ம் ஜார்ஜ் வங்காள பிரிவினையை ரத்து செய்வதாக அறிவித்தார். அப்போதைய வைசிராய் ஹார்டிஞ்ச் பிரபு இந்தியாவின் தலைநகரை கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றும் அறிவிப்பை வெளியிட்டார்.
- 1915-16-ல் இரண்டு ஹோம்ரூல் அணிகள் தொடங்கின.
- பாலகங்காதர் தலைமையில் புனேவில் தொடங்கப்பட்டது.
- 2.அன்னிபெசன்ட் மற்றும் சுப்பிரமணி அய்யர் தலைமை சென்னையில் தொடங்கப்பட்டது.

<u>வங்க பிரிவினை (1905)</u>

- வங்க பிரிவினையை கொண்டு வந்தவர் கர்சன் பிரபு ஆண்டு – அக்டோபர் - 16 1905
- காரணம்: நிர்வாக வசதி, ஆட்சி எளிமை
- ஜீலை 20, 1905-ல் இந்திய வைஸ்ராய் கர்சன் பிரபு வங்காளத்தை இரண்டாக பிரித்தார். கிழக்கு வங்காளம், அசாம் முஸ்லீம் பெரும்பான்மை (மூன்று கோடி மக்கள்) மேற்கு வங்காளம் (5.5 கோடி மக்கள்) இந்து பெரும்பான்மை. இதன்படி கிழக்கு வங்காளத்தின் தலைநகர் டாக்கா என்றும் மேற்கு வங்காளத்தின் தலைநகர் கொல்கத்தா என்றும் அறிவிக்கப்பட்டது.
- கர்சன் பிரபுவை பிரிட்டிஷ் இந்தியாவின் ஔரங்கசீப் என்று வர்ணித்தவர் கோபாலகிருஷ்ண கோகலே ஆவார்.
- கிழக்கு வங்காளம் மற்றும் அசாம் - ஒரு மாகாணம். மேற்கு வங்காளம் மற்றும் பீகார் மற்றொரு மாகாணம்
- நிர்வாக வசதிக்காக அல்ல. இந்து முஸ்லீம்களை பிரிப்பதே வங்க பிரிவினை
- வங்கப்பிரிவினை பொருளாதார புறக்கணிப்பு எனும் "சுதேசி இயக்கம்" தோன்ற காரணமாயிற்று.
- சுதேசி என்பதன் பொருள் சொந்த நாடு. அயல்நாட்டு பொருள் புறக்கணிப்பு, சொந்த நாட்டில் தொழில் மேம்பாடு - சுதேசி இயக்கம்

**முஸ்லீம் லீக் தோற்றம்:**

- டிசம்பர் 30 1906ல் நவாப் சலிமுல்லா கான், நவாப் மொஸின்-உல்-முல்க் தலைமையில் தொடங்கப்பட்டது.
- நிரந்தர தலைவர் ஆகாகான்
- முஸ்லீம்களின் உரிமை பாதுகாப்பு மற்றும் சலுகைகளை பெறுதல் ஆகியவை முஸ்லீம் லீக்கின் நோக்கம்.

**சூரத் பிளவு :- 1907**

- ராஷ்பீகாரி கோஷ் தலைமையில் நடைபெற்ற சூரத் மாநாட்டில் காங்கிரஸில் மிதவாதிகள் தீவிரவாதிகளுக்கு இடையே பிரிவு ஏற்பட்டது.
- ராஷ்பிகாரி கோஷை தலைவராகத் தேர்தெடுத்ததில் பிரச்சனை உருவானது. தீவிரவாதிகள் தலைவராக லாலா லஜபதிராய் தேர்தெடுக்கக் கோரினார்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- திலகர்,அரவிந்த கோஷ் - தீவிரவாதிகள் கோகலே, ராஷ் பிகாரி கோஷ் மிதவாதிகள்

## மிண்டோ – மார்லி சீர்திருத்தம் கி.பி.1909:

- முஸ்லீம்களை திருப்திபடுத்த கொண்டு வந்த சட்டம் 1909ம் ஆண்டு மின்டோ மார்லி சட்டம் இது முஸ்லீம்களுக்கு தனிதொகுதி வழங்கியது.
- மின்டோ மார்லி சீர்திருத்தத்தை காங்கிரஸ் எதிர்த்தது.

## 1911 – தலைநகர் மாற்றம்

- 1911 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி இந்தியாவின் தலைநகராக தில்லி அறிவிக்கப்பட்டது.
- 1912 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி தில்லியில் நடைபெற்ற காரனேஷன் தர்பாரில் (Coronation Durbar) ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் அவரது மனைவியான இராணி மேரியாரும் கலந்து கொண்டனர்.

## கதர் கட்சி (1913):-

- லாலா ஹர்தயாள், தாரக்நாத் தாஸ், சோகன்சிங் பக்னா ஆகியோரால் உருவாக்கப்பட்டது.
- இதன் பெயர் கதர் என்னும் பத்திரிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது. இது 1913 நவம்பர் 1ல் 1857 கலகத்தை எடுத்துரைக்கத் துவங்கப்பட்டது.
- இதன் தலைமையகம் சான்பிரான்ஸிஸ்கோ ஆகும்.
- முதலாம் உலகப்போரின் காரணமாக கதர் கட்சி உறுப்பினர்கள் இந்தியாவை விடுவிக்க (அரசிடமிருந்து) பல்வேறு காரணங்கள் கிடைத்தன.
- இவர்கள் பல்வேறு வங்காள புரட்சிக்காரர்கள் ஒத்துழைப்புடன் இந்தியா திரும்பினார். இவர்களது திட்டம் கடைசி கணத்தில் நம்பிக்கைத் துரோகத்தால் தோல்வியுற்றது.

## தன்னாட்சி இயக்கம் கி.பி.1916

- பூனா 1916 - பாலகங்காதர திலகர்.
- சென்னை 1916 - அன்னிபெசன்ட் (அயர்லாந்து) மற்றும் எஸ். சுப்பிரமணிய ஐயர்
- அன்னிபெசன்ட் நடத்திய பத்திரிக்கையான நியூ இந்தியாவை ஆங்கில அரசு தடைசெய்தது.
- மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ், தன்னாட்சி இயக்கத்திற்கு தங்கள் முழு ஆதரவை தந்தனர்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**லக்னோ ஒப்பந்தம் கி.பி.1916**

- ❖ INC மாநாடு **(இலட்சுமணபுரி)** 1916 – லக்னோவில் நடைபெற்ற போது நடந்த இரண்டு முக்கிய நிகழ்வுகள்.
- 1.மிதவாதிகள் தீவிரவாதிகள் ஒன்றுபட்டனர். அம்பிகா சரண்மஜீம்தார் தலைமையேற்றார்.
- 2.காங்கிரஸ், முஸ்லீம் லீக் சுய ஆட்சி பெறுவதில் ஒப்பந்தம் - 1916 டிசம்பர் 29ம் தேதி. ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் Agreed to separate electorates for the Muslims. மேலும் முஸ்லீம்களின் ஒரே பிரதிநிதியாக முஸ்லீம் லீக் என காங்கிரஸ் ஏற்று முஸ்லீம் லீக் கட்சியை அரசியல் கட்சியாக அங்கீகரித்தது.
- ❖ லக்னோ மாநாட்டில் (1916) தான் ஜவஹர்லால் நேரு காந்திஜியை முதன் முதலில் சந்தித்தார்.
- ❖ இச்சமயம் முஸ்லீம் லீக் அதன் சம்மேளனத்தை லக்னோவில் நடத்தியது.

## ஆகஸ்ட் அறிக்கை ஆகஸ்ட் 20 - 1917

- ❖ நிர்வாகத்தில் இந்தியர்கள் அதிகம் பங்குபெற வாய்ப்பு.
- ❖ இதன் குறிக்கோள் " இந்தியர்களின் ஒத்துழைப்பை நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் அதிகரிப்பது, இந்திய அரசினை மேம்படுத்தி அது பிரிட்டிஷ் பேரரசின் உட்பகுதி என உணரவைப்பது"
- ❖ இந்தியாவிற்கு படிப்படியாக தன்னாட்சி வழங்க உறுதியளித்தது

**மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தம் கி.பி.1919**

- ❖ முதல் உலகப்போரில் இந்தியர்கள் ஆதரவு தந்ததால் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். இதனால் (கைமாறாக) 1919 ஆம் ஆண்டு மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டம் இயற்றப்பட்டது.

## 1919-ஆம் ஆண்டு சட்டத்தின்படி

- ❖ மத்திய மாகாண சட்ட மன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன
- ❖ மாகாணங்களில் இரட்டை ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ ஆங்கிலோ இந்தியர்கள், சீக்கியர்கள் மற்றும் கிருத்துவர்களுக்கு இச்சட்டத்தின்படி தனித்தனி தொகுதிகள் வழங்கப்பட்டன.
- ❖ 1919-ஆம் ஆண்டு சட்டம் காங்கிரஸ் நிராகரித்தது.
- ❖ 1919-ஆம் ஆண்டு சட்டத்தை இயற்றியது ஆங்கிலேயரின் பெருந்தன்மையற்ற செயல் எனவும் அதனை ஏற்றுக் கொள்வது இந்தியருக்கு மதிப்புடையதாகாது என கூறியவர்- அன்னிபெசன்ட் அம்மையார்.

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- சுய ஆட்சியை நோக்கி எடுத்த வைக்கப்பட்ட முதல் படி மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம் ஆகும்.

## ரௌலட் சட்டம் கி.பி.1919

- உத்தரவின்றி எவரையும் கைது செய்யவும் விசாரணையின்றி அதிகபட்சம் இரண்டு வருடம் வரை சிறைவைப்பது என ஆங்கில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
- மக்களின் ஹேபியஸ் கார்பஸ் உரிமையை ரத்து செய்தது. இவ்வுரிமைதான் இங்கிலாந்து மக்களின் சுதந்திரத்திற்கான அடிப்படைச் சட்டம் ஆகும்.
- இந்திய மக்கள் இதனை கருப்புச் சட்டம் என அழைத்தனர்
- ரௌலட் சட்டம் எதிர்ப்பு 1919 ஏப்ரல் 9 நாடு முழுவதும் கடையடைப்பு, மறியல் மற்றும் போராட்டம் (Hartals)
- இதனை மத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தனர். முகமது அலி ஜின்னா, மதன் மோகன் மாளவியா மற்றும் மசார்-உல்-ஹர் ஆகிய 3 உறுப்பினர்கள் பதவி விலகினர்.
- காந்தியடிகள் இச்சட்டத்தை எதிர்த்து சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்.
- அவர் சத்தியாகிரக சபாவினை துவக்கினார்.
- அதன்படி இந்தியா முழுவதும் 1919-ம் ஆண்டு ஏப்ரல் 6-ம் தேதி சத்தியாகிரக நாள் (National day) நடைபெற்றது.
- காந்தியடிகள் தமக்கு அளிக்கப்பட்ட கேசர்-இ-ஹிந்த் என்ற பட்டத்தை திருப்பி அளித்தார்.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை கி.பி.1919

- 1919 ஏப்ரல் 13ல் பஞ்சாபின் முக்கிய தலைவர்கள் டாக்டர்.சத்தியபால் மற்றும் டாக்டர்.சாய்புதீன் கிச்லு ஆகியோர் ரௌலட் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டதை எதிர்த்து பத்தாயிரம் மக்கள் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலபாக் பூங்காவில் அமைதியாக கூடியிருந்தனர்.
- இராணுவத் தளபதி ஜெனரல் டயர் எவ்வித முன்னறிவிப்பின்றி தனது படைகளுடன் துப்பாக்கி சூடு நடத்தினார்.
- ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இரவீந்திரநாத் தாகூர் தனது நைட்ஹூட் (Knighthood) பட்டத்தை துறந்தார்.
- இதனை விசாரிக்க ஹண்டர் குழு அமைக்கப்பட்டது.
- 1940-ம் ஆண்டு உத்தம் சிங் என்பவர் இந்நிகழ்ச்சிக்கு காரணமான ஜெனரல் டயரை இங்கிலாந்தில் சுட்டுக் கொன்றார்.

## கிலாபத் இயக்கம் கி.பி.1919

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ முதல் உலகப்போரில் ஜெர்மன் அதன் நட்பு நாடான துருக்கி தோல்வி அடைந்தது. இதில் துருக்கி பேரரசு துண்டாக்கப்பட்டு பிரிட்டன், பிரான்ஸ் பங்கு போட்டு கொண்டனர்.
- ❖ முதல் உலகப்போர் விளைவாக உலக முஸ்லீம்களின் சமய தலைவரான காலீப் அவமதிக்கப்பட்டார். இது முஸ்லீம்களின் பெருத்த அவமானமாக கருதப்பட்டதால் ஆங்கிலேயரிடம் இந்திய முஸ்லீம்களுக்கு எதிர்ப்பு உண்டாயிற்று.
- ❖ மேற்கூறிய காரணங்களால் ஆங்கில அரசுக்கு எதிராக இந்தியாவில் முகமது அலி, சவுகத் அலி என்ற அலி சகோதரர்களால் , மௌலானா ஆஸாத், ஹக்கிம் அஜ்மல்கான் மற்றும் ஹஸ்ரத் மொஹானி ஆகியோருடன் இணைந்து தொடங்கப்பட்டது.
- ❖ கிலாபத் இயக்கம் முஸ்லீம் லீக், காங்கிரஸ் நெருங்கி வர நல்ல சந்தர்ப்பம் என எண்ணி காந்தி முழு மனதுடன் இவ்வியக்கத்தை ஆதரித்தார்.
- ❖ 1920 மார்ச் -10இல் கிலாபத் பின்பற்றுவதற்கான செயல்திட்டத்தை காந்தி வெளியிட்டார்.

**மாப்ளா கலகம் - 1921**

- ❖ கிலாபத் இயக்கத்தின் விளைவாக கேரளாவின் மலபார் பகுதியில் உருவாகியது. மலபார் பகுதி, பிரிட்டிஷ் அரசாங்கம் மற்றும் இந்து ஜமீன்தார்கள் மாப்ளா முஸ்லீம் விவசாயிகளை சுரண்டுவதற்கு எதிராக ஏற்பட்டது. 1921ல் நடந்தது.

**சுருக்கம் கி.பி.1858 – கி.பி.1919**

- ❖ கி.பி.1885 – இந்திய காங்கிரஸ் தோற்றம்
- ❖ கி.பி.1885 – 1905 – மிதவாதிகள் தீவிரவாதிகள்
- ❖ கி.பி.1905 – வங்க பிரிவினை
- ❖ கி.பி.1906 – முஸ்லீம் லீக் தோற்றம்
- ❖ கி.பி.1907 – சூரத் பிளவு (மிதவாதி – தீவிரவாதி)
- ❖ கி.பி.1909 – மின்டோ மார்லி சீர்திருத்தம்
- ❖ கி.பி.1914 – 1918 முதல் உலகப்போர்
- ❖ கி.பி.1916 – முதல் உலகப்போர் தொடக்கம்
- ❖ கி.பி.1916 – தன்னாட்சி இயக்கம்
- ❖ கி.பி.1916 – லக்னோ ஒப்பந்தம்
- ❖ கி.பி.1917 – ஆகஸ்ட் அறிக்கை
- ❖ கி.பி.1919 – மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்
- ❖ கி.பி.1919 – ரௌலட் சட்டம்

## இந்திய விடுதலை இயக்கம் - II ( கி.பி.1920 – கி.பி.1947)

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

# காந்திய சகாப்தம்

❖ 1915 ஜனவரி 9-ம் நாள் காந்திஜி தனது 49-ஆம் வயதில் இந்தியா வந்தார் (தனது அரசியல் சோதனைக் கூடம் என குறிப்பிட்ட தென்னாப்பிரிக்காவிலிருந்து) இந்நாள் வெளிநாடு வாழ் இந்தியர் தினமாக (பிரவாசி பாரதீய தினமாக) கடைபிடிக்கப்படுகிறது.

❖ காந்திஜி 1916-இல் அகமதாபாத்தின் சபர்மதி ஆஸ்ரமத்தை உருவாக்கினார்.

## காந்தியின் இயக்கங்கள் :

## ஒத்துழையாமை இயக்கம் (கி.பி.1920 – 1922)

❖ மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம், ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை ஆகியவற்றை எதிர்த்து மேற்கொண்ட இயக்கம் ஒத்துழையாமை இயக்கம் ஆகும்.

❖ இந்தியா முழுமைக்கும் காந்திஜி நடத்திய முதல் போராட்டம் ஒத்துழையாமை இயக்கம் ஆகும்.

❖ இதன் நோக்கம் இந்தியச் சட்டம் 1919-ன்படி நடக்க இருக்கும் தேர்தலை புறக்கணிப்போம்.

❖ ஒத்துழையாமை இயக்கத்தின் மூன்று நிலைகள்:

- அரசிடம் பெற்ற பட்டம், பதவி, விருதுகளை துறத்தல்
- வேலை நிறுத்தம், சட்டமன்றம், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் புறக்கணிப்பு (boycott), அரசு பணிகளை துறத்தல்,
- கடைசி கூட்டம் வரிகொடா இயக்கம்

❖ சுபாஷ் சந்திரபோஸ் பொதுப்பணியிலிருந்து பதவிவிலகினார். சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு - வழக்கறிஞர் பட்டத்தைத் துறந்தனர்.

❖ 1920-ல் நாகபுரியில் நடைபெற்ற மாநாட்டில் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் முடிவு செய்யப்பட்டது.

❖ 1921-ல் ரெஸ்வடாவில் நடைபெற்ற மாநாட்டில் ஒர கோடி நபர்களை உறுப்பினராக சேர்த்து திலகர் சுயராஜ்ஜிய நிதியாக 1 கோடி ரூபாய் திரட்டப்பட்டு கைராட்டைகள் போன்றவை வாங்கித் தரப்பட்டது.

❖ ஒத்துழையாமை இயக்கம் படிப்படியாக வரிகொடா இயக்கம், கிசான் (விவசாயிகள்) இயக்கம், அகாலி இயக்கம் போன்ற இயக்கங்களாக பிரிந்து உச்ச கட்டத்தை அடைந்தது.

❖ 1921 – ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் அரசு தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை மக்கள் அரசுக்கு வரி செலுத்தக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 17-11-1921-ல் பம்பாய் வந்து இறங்கிய வேல்ஸ் இளவரசருக்கு கண்டனம் தெரிவித்து முழு அடைப்பு மற்றும் கருப்புக் கொடி காட்டப்பட்டது.

## செளரி செளரா கி.பி.1922

- (ஒத்துழையாமை இயக்கத்தின் போது) 1922 சனவரி 5ம் நாள் உத்தரபிரதேசத்தில் செளரி செளரா (கோராக்பூர்) என்னுமிடத்தில் விவசாய பேரணியில் போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினர். அதற்கு எதிராக விவசாயிகள் காவல் நிலையத்தை தாக்கி தீயிட்டு கொளுத்தினர். இதில் 22 காவலர்கள் உயிரிழந்தனர்.
- செளரி செளரா சம்பவம் காரணமாக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை பிப்ரவரி 12-இல் உடனடியாக நிறுத்தினார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டார்.

## சுயராஜ்ஜியக் கட்சி (கி.பி.1923 – 1925)

- 1923 -இல் சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு ஒன்று சேர்ந்து சுயராஜ்ஜியக் கட்சியை தோற்றுவித்தனர்.
- சுயராஜ்ஜியக் கட்சி தோன்றிய இடம் - அலிப்பூர் சிறை
- இக்கட்சி காந்தி கைதுக்கு பிறகு சுதந்திர போராட்டத்தை தலைமையேற்று நடத்தியது.
- சட்டமன்றங்களை புறக்கணிப்பதை தவிர்த்து ஆங்கில அரசை சட்ட மன்றங்களிலேயே எதிர்ப்பது என்று சுயராஜ்ஜியக் கட்சி தலைவர்கள் விரும்பினர்.
- சட்டமன்றத்தில் பெருவாரியான இடங்களை பெற்று வல்லபாய் பட்டேலை சட்டமன்ற தலைவர் ஆக்கினார்கள்.
- இந்தியாவில் இந்தியர்களின் (Dominion) தன்னாட்சி ஏற்படுத்தவும், வட்ட மேசை மாநாடுகள் மூலம் கோரிக்கைகள் பரிசீலிக்க இக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியது.
- இக்கட்சி நிறுவனர் சி.ஆர்.தாஸ் மறைந்ததால் இக்கட்சி 1925-ல் கலைக்கப்பட்டது.

Dept. of Employment

## முடிமன் குழு

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

❖ சர் அலெக்சாண்டர் முடிமன் தலைமையில் ஒரு குழு 1919-ம் ஆண்டு இந்தியச் சட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை ஆராய இங்கிலாந்து அரசாங்கம் 1924ல் (Muddiman Committee) அனுப்பியது.

## சைமன் குழு கி.பி.1927 – 1928

❖ 1927–நவம்பரில் பிரிட்டீஸ் அரசு Indian Statutory Commission உருவாக்கியது. இக்கமிஷனுக்கு சர். ஜான் சைமன் தலைமை ஏற்றதால் - சைமன் கமிசன்.

❖ 1919 ஆம் ஆண்டு சட்டத்தினை ஆராயவும், இந்திய நிர்வாகத்தை மேம்படுத்தவும் சர்ஜான்சைமன் தலைமையில் 7 பேர் கொண்ட ஒரு குழு
❖ குழுவில் அனைவரும் ஆங்கிலேயர்கள். ஒருவர் கூட இந்தியர் இல்லை.
❖ 1928-ல் சைமன் குழு இந்தியா வந்த பொழுது என கடும் எதிர்ப்பு தெரிவித்து சைமனே திரும்பி செல் (Simon Go back) என்று போராட்டம் செய்தனர்
❖ நீதிக்கட்சி எனப்படும் ஜஸ்டிஸ் பார்ட்டி மற்றும் பஞ்சாப் யூனியனிஸ்ட் ஆகிய இரண்டும் எதிர்க்கவில்லை.
❖ சைமன் குழு எதிர்ப்பில் கலந்து கொண்ட , பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் காவலர்கள் தடியடியால் தாக்கப்படடு அக்டோபர் 30, 1928ல் உயிரிழந்தார்.
❖ பகத் சிங், சந்திரசேகர் ஆசாத், ராஜகுரு – காவல் அதிகாரி சாண்டர்ஸ் சுட்டுக்கொலை
❖ பகத் சிங், பி.கே.தத் - மத்திய சட்டமன்றத்தில் வெடி குண்டு வீசினார்கள்.

❖ 1928-ல் வரிகொடா இயக்கத்திற்கு ஆதரவாக குஜராத்தின் பர்தோலியில் நடந்த சத்தியாகிரகத்திற்கு தலைமை வகுத்தவர் வல்லபாய்பட்டேல். இதை பாராட்டும் விதமாக காந்திஜி அவருக்கு சர்தார் என்ற பட்டத்தை வழங்கினார்.
❖ சைமன கமிஷனுக்கு பதிலாக இந்தியர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் மறுசீரமைப்பே நேரு அறிக்கை எனப்படும். 1928-இல் மோதிலால் நேரு தலைமையில் இந்த அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது.

## லாகூர் மாநாடு கி.பி.1929

❖ 1929 லாகூரில் காங்கிரஸ் மாநாடு நேரு தலைமை
❖ பூரண சுதந்திரம் தீர்மானம்
❖ டிசம்பர் 31 – 1929 – ம் ஆண்டு நள்ளிரவில் வந்தே மாதரம் என்ற பாடலுக்கிடையே ராவி நதிக்கரையில் இந்திய மூவர்ண கொடி ஏற்றப்பட்டது.
❖ ஜனவரி 26, 1930ல் நாடு முழுவதும் விடுதலை நாளாக கொண்டாடப்பட்டது.
❖ 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது பூரண விடுதலை நாள் நினைவாக குடியரசு தினம்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ காந்தியடிகள் பிரிட்டிஷ் ஆட்சியை A Crime Against the man and the God என்று கூறினார்.
- ❖ நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் தொடர முடிவு செய்யப்பட்டது. இதன் பொறுப்பு காந்திஜியிடம் ஒப்படைக்கப்பட்டது.

## சட்டமறுப்பு இயக்கம் (அ) உப்பு சத்தியா கிரகம் கி.பி.1930

- ❖ 1930 மார்ச் 12ல் ஆங்கில அரசின் உப்பு வரி எதிர்த்து தொடங்கப்பட்டது.
- ❖ "ரொட்டி வேண்டுமென்று முழந்தாளிட்டு கேட்டதற்கு கல்லே கிடைத்தது" என காந்தியடிகளின் உப்புச் சத்தியாகிரகத்தை துவக்கினார்.
- ❖ காந்தியடிகள் சரோஜினி நாயுடு உட்பட 78 தொண்டர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி வரை 400 கி.மீ பயணம்.
- ❖ தண்டியில் ஏப்ரல் -6ல் கடல்நீரில் உப்பு காய்ச்சி காந்தி கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். நேரு – நைனிடால சிறை
- ❖ தமிழகத்தில் ராஜாஜி தலைமையில் திருச்சி – வேதாரண்யம் (தஞ்சை)
- ❖ டி.பிரகாசம், நாகேஸ்வரராவ் - மெரினா கடற்கரை
- ❖ கர்நாடகம் - சானிக்கட்டா என்ற இடத்தில் உப்பு மண்டி தாக்கப்பட்டது.
- ❖ கேரளாவில் - கேளப்பன் - கள்ளிக்கோட்டை
- ❖ வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் - கான் அப்துல் கபார் கான் சிவப்புச் சட்டை இயக்கத்தைத் துவங்கினார் (Kudaikhidmatgars)

## வட்டமேசை மாநாடு அறிவிப்பு - அக்டோபர் மாதத்தில் அறிவிக்கப்பட்டதால் தீபாவளி அறிவிப்பு

## வட்டமேசை மாநாடு-I நவ 1930 - ஜன. 1931:

- ❖ சட்ட மறுப்பு இயக்கம்- ஆங்கில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் பிரச்சனைக்கு தீர்வு காண வட்ட மேசை மாநாடுகள் கூட்டியது.
- ❖ 1930 முதல் வட்ட மேசை மாநாடு லண்டன். இதில் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை. மாநாடு தோல்வியில் முடிந்தது.
- ❖ 1931ல் இர்வின் பிரபு இந்தியா வந்து காந்தியிடம் சட்ட மறுப்பை கைவிடுமாறு கூறி ஒப்பந்தம் **(டெல்லி ஒப்பந்தம்)** மாரச.15 செய்தார்.
- ❖ Storm in a Tea cup - இர்வின்

## இர்வின் ஒப்பந்த நோக்கம் - இந்திய காங்கிரஸ் ஒப்புதல்

- ❖ சட்ட மறுப்பு இயக்கம் கைவிடல்.

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்வதென ஒப்புக்கொள்ளுதல்

**இர்வின் ஒப்பந்த நோக்கம் - பிரிட்டிஷ் ஒப்புதல்**

- ஆங்கில அரசு போரட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் விடுதலை செய்வது.
- உப்பு வரிச் சட்டங்களை திரும்பப் பெறுவது.

**வட்டமேசை மாநாடு-II (செப்-டிச) 1931:**

- செப்.7-1931ல் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார். முழு சுதந்திரம், வகுப்பு பிரச்சனை குறித்து எந்த தீர்வும் ஏற்படவில்லை. நாடு திரும்பிய காந்தி கைது செய்யப்பட்டார்.
- சூரத் மாவட்டத்தில் நிலவரி வசூல் செய்வதில் ஏற்பட்ட பிரச்சனைகளை விசாரணை செய்ய புலாபாய் தேசாய் மற்றும் வல்லபாய் படேல் சென்றனர்.
- வரி கொடா இயக்கம் காரணமாக ஜவகர்லால் நேரு, புருஷோத்தம் தாஸ் தாண்டன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
- மீண்டும் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்டது.

**கி.பி.1932 – பூனா ஒப்பந்தம் வகுப்பு வாத அறிக்கை :**

- இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் இறுதியில் இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டொனால்டு வகுப்பு வாத அறிக்கை ஆக.17-1932ல் வெளியிடப்பட்டது.
- சிறுபான்மையினர்(முஸ்லிம், சீக்கியர்), தாழ்த்தப்பட்டோருக்கு தனி இட ஒதுக்கீடு
- வகுப்பு வாத அறிக்கை ஏற்க மறுத்த காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார்.
- 1932ல் அம்பேத்கார் - காந்திகிடையே பூனா ஒப்பந்தம்.
- உண்ணாவிரதத்தை காந்தி கைவிட்டார்.
- தனித்தொகுதி ஒதுக்கீடு கைவிடப்பட சட்ட சபையில் தாழ்த்தப்பட்டோருக்கு அதிக எண்ணிக்கை இடங்கள் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.
- மூன்றாம் வட்ட மேசை மாநாடு நவ.– டிச.1932ல் லண்டனில் நடைபெற்றது. காங்கிரஸ் இதில் பங்கு பெறவில்லை. தோல்வியில் முடிந்தது.

**மூன்று வட்டமேசை மாநாடுகளில் பங்கு கொண்டவர்கள்**

- பி.ஆர். அம்பேத்கார், ஜெயகர்

**1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்:**

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ மூன்று வட்ட மேசை மாநாடு முடிவுகள் மற்றும் சைமன் குழு அறிக்கை முடிவுகள் அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டம் 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் ஆகும்.
- ❖ மாகாணங்களில் தன்னாட்சி (Dominion) அறிமுகம்
- ❖ மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி ஒழிப்பு
- ❖ மத்தியில் கூட்டாட்சி (Federation) ஏற்படுத்துதல்
- ❖ மாநிலங்களில் ஏற்படும் சிக்கல்களை தீர்க்க கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவுதல்
- ❖ கூட்டாட்சி ரிசர்வ் வங்கி நிறுவப்படுதல்

## இரண்டாம் உலகப்போர் 1939 – 1945:

- ❖ 1935 சட்டத்தின்படி 1937ல் மாநிலங்களில் பொது தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 11 மாநிலங்களில் 7லில் காங்கிரஸ் வெற்றி, சிந்துவில் முஸ்லீம் லீக், ஆட்சி அஸ்ஸாமில் முஸ்லீம் லீக்.
- ❖ 1937ல் காங்கிரஸ் வெற்றி பெற்று 1939 வரை அமைச்சரவை செயல்பட்டது.
- ❖ 1939ல் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா காரணம் இரண்டாம் உலகப்போரில் கலந்து கொள்ள மறுப்பு (9 மாநிலம் ராஜினாமா).
- ❖ காங்கிரஸ் ராஜினாமா செய்ததை முஸ்லீம் லீக் கட்சி தலைவர் முகமது அலி ஜின்னா வரவேற்று கொண்டாடினார். அந்நாளை 1939 செப்டம்பர் 22 விடுதலை நாளாக கொண்டாடினார். இரு நாடு தேவை கோரிக்கையை முன்னிறுத்தினார் ஜின்னா.

## பாகிஸ்தான் கோரிக்கை கி.பி.1940

- ❖ முகமது அலி ஜின்னா 1940 - ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டில் தனது தனி நாடு கோரிக்கையை வெளியிட்டார்.
- ❖ பாகிஸ்தான் என்ற சொல்லை உருவாக்கியவர் - ரகமத் அலி
- ❖ 1943 டிசம்பர், முஸ்லீம்லீக் கராச்சி மாநாட்டில் அது "பிரித்து கொடுத்து விடு, வெளியேறு" என்னும் வார்த்தையை எழுப்பியது.

## ஆகஸ்ட் பிரகடனம் (ஆகஸ்ட் 8, 1940):-

- ❖ 1940 ஆகஸ்ட் நன்கொடை லின்லித்கோ ஆங்கில அரசு பிரதிநிதி அறிவித்தார்.
- ❖ இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை லித்தோ ஈடுபடுத்தினார், காங்கிரஸ் எதிர்த்தது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ஆகஸ்ட் நன்கொடை என்பது இந்திய அரசியல் நிர்ணய சபை அமைக்க ஒரு குழு நியமிக்கப்படும், அரசு பிரதிநிதி போர் ஆலோசனை குழுவில் இந்தியர் இடம்பெறுவர் என்பதே ஆகும்.
- ஆகஸ்ட் நன்கொடையை காங்கிரஸ் நிராகரித்தது.

## கிரிப்ஸ் தூதுக்குழு கி.பி.1942

- இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் இங்கிலாந்துக்கு எதிராக ஈடுபட்டது.
- 1942 மார்ச் மாதம் சர்ஸ்டா.ஃ.போர்டு கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியா வந்தது.
- இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு டொமினியன் அந்தஸ்து வழங்குதல், அரசியல் அமைப்பினை வரைய புதிய திட்டம் என அறிவிப்பு. ஆனால் முழு சுதந்திரம் பற்றி கூறவில்லை.
- திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின் தேதியிட்ட காசோலை என கிரிப்ஸ் குழுவை காந்தி கூறினார்.
- கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைந்தது.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் கி.பி.1942

- 1942 ஆகஸ்ட் 8ல் மும்பை மாநாட்டில் காந்திஜி கூறிய முழக்கம் “முழு சுதந்திரம் அடைவோம்”,˙ “செய் (அ) செத்து மடி”
- காந்தி, ஆசாத், நேரு, அபுல்கலாம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
- காந்திஜி பூனா ஆகாகான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டார்.
- இரண்டாம் உலகபோர் 1945ல் முடிவு பெற்றது. இங்கிலாந்தில் கிளமண்ட் அட்லி தலைமையில் தொழில்கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.
- அட்லி இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்தார். அவர் பிரச்சனை தீர்க்க குழு அமைத்தார். அக்குழு சுதந்திரம் வழங்க பரிந்துரைத்தது.

## சுபாஷ் சந்திர போஸ் - INA இந்திய தேசிய ராணுவம் கி.பி.1942

- நேதாஜி 1927ல் காங்கிரசில் இணைந்தார். 1938ல் காங்கிரஸ் தலைவரானார், 1939ல் முற்போக்கு கட்சியை தொடங்கினார்.
- 1943 சிங்கப்பூர் சென்று அங்கு இந்திய விடுதலை கழகத்தின் தலைமை பொறுப்பை ஏற்றார்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- சிங்கப்பூரில் இந்திய விடுதலை கழக பொறுப்பை ஒப்படைத்தவர் இராஷ்பிகாரி கோஷ்.
- அந்தமான் நிக்கோபாரை ஜப்பான் உதவியுடன் கைப்பற்றி "ஷாகித்" மற்றும் "சுவராஜ்" என்று பெயர் மாற்றினார்
- ஆசாத் ஹிந்த் ஃபவுஜ் (இந்திய தேசிய இராணுவம்).
- இந்திய தேசியப்படை விசாரணை டெல்லி செங்கோட்டையில் நடந்தது. பி.கே. செகால், ஷாநாவாஸ் (இந்திய பார்மா எல்லையில் நுழைந்த பட்டாலியனின் தளபதிகள்) மற்றும் குர்பக் சிங் தில்லான் ஆங்கிலேயரால் விசாரிக்கப்பட்டனர். காங்கிரஸ் தங்களை புலாபாய் தேசாய், தேஜ்பகதூர் சப்ரு, ஜவஹர்லால் நேரு, கே.என். காட்ஜு மற்றும் ஆஸாப் அலி ஆகியோரின் வாதத்தால் தற்காத்துக் கொண்டது.
- இந்திய INS பெண்கள் பிரிவு ஜான்சி ராணி என்ற பெயரில் அமைக்கப்பட்டது இதன் தலைவர் தமிழ்நாட்டை சேர்ந்த லட்சுமி.
- ஜெய் ஹிந்த், டெல்லியை நோக்கி செல். (டெல்லி சலோ)

## வேவல் திட்டம் (ஜுன்- ஜுலை 1945):-

- வேவல் பிரபுவால் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் படி வைசிராயின் உயர்மட்டக்குழு உறுப்பினர்கள், கவர்னர் ஜெனரல் மற்றும் படைத்தளபதி தவிர அனைவரும் இந்தியர்கள் (பல்வேறு கட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்கள்.) சிம்லா மாநாடு இதனை நிறைவேற்ற நடத்தப்பட்டது.

## அமைச்சரவை தூதுக்குழு கி.பி.1946

- பெதிக் லாரன்ஸ், ஏ.வி.அலெக்ஸாண்டர் மற்றும் சர் ஸ்டா போர்டு கிரிப்ஸ் மூவர் அடங்கிய குழு கேபினட் குழு (பிரிட்டிஸ் அமைச்சரவை உறுப்பினர்கள்)
- கேபினட் குழு கூட்டாட்சி அரசு அமைய பரிந்துரைத்தல் அரசியலமைப்பு சட்டம் எழுத வேண்டுமென்று கூறுதல். அச்சட்டம் தயாராகும் வரை அனைத்து கட்சி பிரதிநிதிகளை கொண்ட இடைக்கால அரசு மத்தியில் அமைய பரித்துரைத்தது.
- இடைக்கால அரசின் பிரதமர் ஜவகர்லால் நேரு. இடைக்கால அரசு நிறுவப்பட்ட ஆண்டு 1946
- நேரு இடைகால அரசு அமைய ஜின்னா உதவி நாடினார். ஜின்னா மறுத்துவிட்டார்.

## ஜின்னாவின் நேரடி செயல் தீர்மானம் (ஆகஸ்ட் 16, 1946):-

- தேர்தல் முடிவுகளுக்குப் பின் முஸ்லீம் லீக்கின் நிலைகண்டு முகமது அலி ஜின்னா "நேரடி செயல்" தீர்மானத்தை ஆகஸ்ட் 16, 1946ல் வெளியிட்டார்.
- ஜின்னா 1947 மார்ச் 27யை பாகிஸ்தான் தினமாகக் கொண்டாடினார்.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## DICKY BIRD PLAN OR JUNE 3RD PLAN

- 1947ல் ஆங்கில அரசு பிரதிநிதி மவுண்ட்பேட்டன். அவர் கடைசி அரசு பிரதிநிதி.
- 1947 ஜீன் 3 மவுண்ட்பேட்டன் திட்டம் அறிவிப்பு. இது ஜீன் 3 திட்டம் எனவும் அழைக்கப்பட்டது.
- அது இந்திய யூனியன், பாகிஸ்தான் யூனியன் இரு நாடு பிரிவு ஆகும்.

## 1947 ஜீலை மாதம் இந்திய விடுதலை சட்டம்

- மவுண்ட் பேட்டன் திட்டத்தின்படி பிரிட்டீஸ் பாராளுமன்றம் 1947 ஜீலை 4-ம் தேதி
- இந்திய சுதந்திரச் சட்டத்தை (இந்தியன் இன்டிபென்டன்ட் ஆக்ட்) நிறைவேற்றியது
- சிந்து, பலுசிஸ்தான், வடமேற்கு எல்லை மாகாணம், மேற்கு பஞ்சாப், கிழக்கு வங்காளம், அசாமில் சில்ஹட் மாவட்டம் ஆகியன உள்ளடக்கியவை பாகிஸ்தான் எனப்பட்டது. எஞ்சிய பகுதி இந்திய யூனியன் எனப்பட்டது. சர் சிரில் ராட் கிளி.ஃ.ப் என்பவர் இரு நாட்டு எல்லையை வரையறுத்தவர்.
- சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் மவுண்ட்பேட்டன், முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு.
- சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய தலைமை ஆளுநர் சி.இராஜகோபாலச்சாரியார்.
- 1948 சனவரி 30 காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார். இதனை ஜவகர்லால்நேரு நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது என்றார்.
- 565 சுதேசி அரசு. 562 இந்திய யூனியனுடன் இணைந்தது.
- இந்தியாவின் பிஸ்மார்க், இரும்பு மனிதர் - படேல்.
- 1954-ல் பிரெஞ்சு பகுதி காரைக்கால், பாண்டிசேரி, மாஹி சந்திரநாகூர் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது.
- 1961ல் போர்சுகீசிய பகுதிகளான, கோவா, டையு, டாமன் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது.
- அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டது.
- அரசியலமைப்பு நிர்ணயசபை தலைவர் டாக்டர்.இராசேந்திர பிரசாத்.
- சட்ட வரைவு குழு தலைவர் அம்பேத்கார்.
- 1950 சனவரி 26 இந்தியா குடியரசு நாடாக அறிவிப்பு அன்று முதல் அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ டாக்டர். இராசேந்திரபிரசாத் சுதந்திர இந்தியாவில் முதல் குடியரசுத் தலைவரானார்.

## சுருக்கம்:

| | | கி.பி |
|---|---|---|
| ஒத்துழையாமை இயக்கம் | - | 1920 |
| சௌரிசௌரா சம்பவம் | - | 1922 |
| சுயராஜ்ஜியக் கட்சி உதயம் | - | 1923 |
| சுயராஜ்ஜியக் கட்சி | | (1923 -25) |
| சைமன் தூது குழு | - | 1927 - 1928 |
| லாகூர் மாநாடு பூரண சுயராஜ்யம் | - | 1929 |
| சட்ட மறுப்பு இயக்கம் | - | 1930 |
| உப்பு சத்தியாகிரகம் | - | 1930 |
| வட்டமேசை மாநாடுகள் | - | முதல் - 1930<br>இரண்டாம் - 1931<br>மூன்றாம் - 1932 |
| காந்தியின் இர்வின் ஒப்பந்தம் | - | 1931 |
| வகுப்பு வாத (ம) பூனா ஒப்பந்தம் | - | 1932 |
| இந்திய அரசு சட்டம் | - | 1935 |
| இரண்டாம் உலகப்போர் | - | 1939 – 45 |
| ஆகஸ்ட் நன்கொடை | - | 1940 |
| பாகிஸ்தான் கோரிக்கை | - | 1940 |
| கிரிப்ஸ் தூதுகுழு | - | 1942 |
| வெள்ளையனே வெளியேறு | - | 1942 |
| INA தோற்றம் | - | 1942 |
| கேபினட் குழு | - | 1946 |
| இடைக்கால அரசு | - | 1946 |
| மவுண்ட்பேட்டன் திட்டம் | - | 1947 |
| இந்திய விடுதலை சட்டம் | - | 1947 |
| பிரெஞ்சு பகுதி இணைப்பு | - | 1954 |
| போர்ச்சுக்கீசிய பகுதி இணைப்பு | - | 1961 |

*******

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

**சுதந்திரத்திற்குப்பின் இந்தியா (1947-2000) சமூக முன்னேற்றம் :**

1. பூமிதான இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு – 1951 (ஆச்சாரியா வினோபாவே)
2. வரதட்சனை தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1961
3. தமிழ்நாட்டில் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீட்டின் படி அளவு 30%
4. ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாள் - செப்டம்பர் 5
5. கோத்தாரிக்குழு நியமிக்கப்பட்ட ஆண்டு – 1964
6. டாக்டர் ஏ. லட்சுமண முதலியார் - கல்விக்குழு தலைவர்
7. கோத்தாரி – தேசியக் கல்விகுழு
8. டாக்டர் ராதாகிருஷ்ணன் - ஆசிரியர் தினம்
9. மத்திய சமூக நல வாரியம் - 1961
10. பெண் சிசுவதை தடுப்புச் சட்டம் - 1961
11. புதிய கல்விக் கொள்கை – 1986
12. இந்து திருமணச் சட்டம் - 1955
13. பூமிதான இயக்கம் சமத்துவ சமுதாய அமைப்பை உருவாக்குவதாகும்
14. 1971-ல் மருத்துவ ரீதியான கருக்கலைப்பு சட்டம் இயற்றப்பட்டது
15. சுவ-சக்தி திட்டம் 15 முதல் 20 பெண்களைக் கொண்ட சுய உதவிக் தொடங்கப்பட்டது.
16. சர்வோதயா இயக்கத்தினை தொடங்கியவர் - ஆச்சாரியா வினோபாவே
17. இந்து திருமணச்சட்டம் ஒரு தார மணத்தை சட்டப்பூர்வமாக்கியது
18. பெண்கள் சம ஊதியம் பெற வகை செய்யும் சட்டம் - 1976-ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்
19. தொழிற்சாலைகளில் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை தடுக்கும் சட்டம் - 1948 ஆம் ஆண்டு இந்திய தொழிற்சாலைகள் சட்டம்.
20. தீண்டாமை குற்றச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு – 1955
21. டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார் குழு நியமிக்கப்பட்ட ஆண்டு – 1953
22. இந்திய அரசு 1953-ஆம் ஆண்டு மத்திய சமூக நல வாரியத்தை அமைத்தது
23. இந்தியாவின் மிக மோசமான பலவீனமாக விளங்கியது – எழுத்தறிவின்மை
24. திருத்தப்பட்ட வரதட்சனை தடுப்புச்சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு – 1984
25. இந்திய செயற்கை உடல் உறுப்புகள் உற்பத்தி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ள இடம் - கான்பூர்
26. தேசிய பெண்கள் ஆணையம் - 31.01.1992
27. இராஷ்டிரிய மகிள கோஷ் - 30.03.1993
28. பாலிகா சம்ரிதி யோஜனா – 02.10.1997
29. சுவ சக்தி திட்டம் - 16.10.1998
30. பூமிதான இயக்கம் நில உச்சவரம்பினைக் கொண்டுவரப்பட்டது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

31. 1956-ஆம் ஆண்டு இந்து வாரிசு உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டது
32. மகப்பேறு சலுகைகள் சட்டம் - 1961-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
33. 1954 திருமணச் சட்டம் - கலப்புத் திருமணம் ஆண்கள் திருமண வயது – 21 பெண்ணின் திருமண வயது – 18.

## இந்தியாவின் வைஸ்ராய்கள்

### கானிங் பிரபு (1856-62):-

- ❖ கடைசி கவர்னர் ஜெனரல் மற்றும் முதல் வைஸ்ராய்
- ❖ சிப்பாய் கலகம் இவரது காலத்தில் தான் நடந்தது.
- ❖ நவம்பர் 1858ல் பிரிட்டிஷ் நேரடியாக ஆட்சி செய்தது.
- ❖ வாரிசில்லாக் கொள்கை விலக்கப்பட்டது.
- ❖ 1857ல் கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.
- ❖ சென்னை, கல்கத்தா, பம்பாயில் 1962ல் உயர்நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
- ❖ இந்நியக் கவுன்சில் சட்டம் 1861ல் நிறைவேற்றப்பட்டது.

### எல்கின் பிரபு (1862-63)

### லாரன்ஸ் பிரபு (1864-69)

- ❖ தந்தித் தொடர்பு (ஐரோப்பாவுடன்) துவங்கப்பட்டது.
- ❖ பாசனக் கால்வாய் மற்றும் ரயில்வே பணிகள் விரிவாக்கப்பட்டன.
- ❖ இந்திய வனத்துறை உருவாக்கப்பட்டது.

### மேயோ பிரபு (1869-72):-

- ❖ நிதி ஒருபுறமாகக் குவிவதைத் தடுத்து பரவலாக உலாவர யுக்தி முறையை ஆரம்பித்தார்.
- ❖ இந்திய அரசர்களுக்குப் படிப்பதற்காக கத்தியவாரில் ராஜ்கோட் கல்லூரி, அஜ்மீரில் - மேயோ கல்லூரி ஆகியவற்றைத் தொடங்கினார்.
- ❖ 1872ல் இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக மக்கட்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- இந்திய புள்ளியியல் கணக்கெடுப்பை உருவாக்கினார்.
- இந்தியாவில் படுகொலை செய்யப்பட்ட ஒரே வைஸ்ராய், இவர்தான் குற்றவாளி ஒருவரால் 1872ல் அந்தமானில் வைத்துக் கொல்லப்பட்டார்.

## லிட்டன் பிரபு (1876-80):-

- தலைகீழ் எண்ணமுடைய வைஸ்ராய் ( Viceroy of reverse charactors) எனப்படுகிறார்.
- இங்கிலாந்து ராணி விக்டோரியாவிறகு "கெய்சர்-இ-ஹிந்த்"என்னும் பட்டம் வழங்குவதற்காக 1877ல் டெல்லி தர்பாரை நடத்தினார்.
- இந்தியர்கள் ஆயுதங்கள் வைத்திருக்க வாங்க அல்லது விற்கவேண்டுமெனில் அரசின் அனுமதி பெறவேண்டும் என்று வற்புறுத்திய சட்டம் 1878ன் இந்திய ஆயுதச் சட்டமாகும.
- இந்திய பத்திரிக்கைகள் லிட்டன் பிரபுவின் நடவடிக்கைகளையும் ஆங்கில ஆட்சியையும் எதிர்த்து எழுதின.லிட்டன் பிரபு இந்திய பத்திரிக்கைகளின் சுதந்திரத்தை கட்டுப்படுத்த வெளியிடப்பட்ட வட்டார மொழிப் பத்திரிக்கைச் சட்டம் (1878) ல் நிறைவேற்றினார்.

## ரிப்பன் பிரபு (1880-84):-

- வட்டார மொழிப் பத்திரிக்கைத் தடைச் சட்டத்தை (1882) நீக்கனார்.
- இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முறையை அறிமுகம- ரிப்பன் பிரபு 1881
- தலசுயஆட்சி (பஞ்சாயத்து முறை) சட்டத்தை நிறைவேற்றினார் (1882).
- இந்தியாவில் உள்ளாட்சி அரசு நிறுவப்பட, 1883-84ஆம் ஆண்டுகளில் வரிசையாக பல சட்டங்கள இயற்றி இந்தியா முழுவதும் மாவட்ட வாரியங்கள அமைக்கப்பட்டன.
- இவ்வமைப்புகளில் இந்தியர்கள் தங்கள் விவகாரங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்ளப் பயிற்சியளிக்கும் விதத்தில் நியமன முறைக்குப் பதில் தேர்தல் முறை பின்பற்றப்பட்டது. ரிப்பன் பிரபு 'உள்ளாட்சி அரசின் தந்தை'.
- 1882 ரிப்பன் பிரபுவின் கல்விக்குழு தலைவராக சர்.w.w ஹன்டர் என்பவர் செயல்பட்டார்.
- குழு தொடக்கக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்கியது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரிப்பள்ளிகள் நிறுவப்பட வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது. பெண்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றும் அக்குழு அரசுக்கு பரிந்துரை செய்தது.
- குழந்தைத் தொழிலாளர்களைத் தடுக்க முதல் தொழிற்சாலைச் சட்டத்தை 1881. 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் வேலை நேரத்தை நிர்ணயித்தது.
- சி.பி. இல்பர்ட், ரிப்பன் அரசியல் சட்ட உறுப்பினராக திகழ்ந்தார். இல்பர்ட் மசோதா-ன் படி இந்திய நீதிபதிகள் ஆங்கிலக் குற்றவாளிகளையும் விசாரணை செய்யும் உரிமை பெற்றனர். இந்தியாவிலிருந்த ஐரோப்பியச் சமூகத்தினர் அச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். திருத்தப்பட்ட மசோதாவின்படி

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

‘குறைந்தபட்சம் பாதி ஐரோப்பிய உறுப்பினர்களைக் கொண்ட’ நீதிக்குழுவே ஆங்கிலக் குற்றவாளிகளை விசாரிக்க முடியும் என்று மாற்றப்பட்டது.

- ❖ ரிப்பன் பிரபு பஞ்சாப்பில் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.
- ❖ உப்பு மீதான வரியைக் குறைத்து நிலவரி முறையை ரிப்பன் பிரபு சரி செய்தார்

## டப்ரின் பிரபு (1884-1888):-

- ❖ இந்தியத் தேசியக் காங்கிரஸ் இவரது காலத்தில் உருவாக்கப்பட்டது.

## லான்ஸ்டௌன் பிரபு (1888-1894):-

- ❖ இரண்டாவது தொழிற்சட்டம் (1891) கொண்டுவரப்பட்டது. இதில் வார விடுமுறை, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான வேலை நேரம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார். ஆனால் ஆண்களுக்கான வேலை நேரம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.
- ❖ மத்திய தேர்வுப் பணியை அரசுத்துறை, மாகாணம் மற்றும் கீழ்ப்பணி எனப் பிரித்தது.
- ❖ 1892ல் இந்திய கவுன்சில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ பிரிட்டிஷ் இந்தியா மற்றும் ஆப்கான் இடையே எல்லையை நிர்ணயிக்க துரந்த் குழு நியமிக்கப்பட்டது.

## இரண்டாம் எல்ஜின் பிரபு (1894-99):-

- ❖ மிகப்பெரும் பஞ்சம் (1896-97) ஏற்பட்டது. லையல்குழு அமைக்கப்பட்டது.

## கர்சன் பிரபு (1899-1905):-

- ❖ இந்தியப்பல்கலைக்கழகங்கள் சட்டம் (1904)
- ❖ வங்காளப்பிரிவினை – அக்டோபர் 16,1905
- ❖ ஒவ்வொரு பிரதேச காவல் நிர்வாகத்தையும் விசாரிக்க சர் ஆன்ட்ரூ பெரோஷர் தலைமையில் காவல் ஆணையத்தை அமைத்தார்.
- ❖ புராதானச் சின்னப் பாதுகாப்புச் சட்டம் (1904) உருவாக்கப்பட்டது. இந்திய அகழ்வாராய்ச்சித் துறையும் உருவாக்கப்பட்டு, இந்தியாவின் கலாச்சாரம் பாதுகாக்கப்பட்டது.
- ❖ கூட்டுறவு சங்கங்களை அறிமுகப்படுத்தியவர் - கர்சன் பிரபு
- ❖ இந்திய நாணயம் மற்றும் ரூபாய் சட்டத்தை 1899ல் இயற்றினார்
- ❖ கர்சன் பிரபு பஞ்ச நிவாரணக்குழு ஒன்று அமைத்து நிவாரணப் பணிகளுக்கு பெருந்தொகை ஒதுக்கினார்.
- ❖ விவசாயஆராய்ச்சி மையம் - பூசா

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

## மிண்டோ (1905-1910):-

- ❖ அரசியல் அமைதியற்ற நிலை இந்தியாவில் நிலவியது. புரட்சிகளை ஒடுக்க பல சட்டங்கள் இயற்றப்பட்டன. தீவிரவாதிகளான லாலா லஜபதிராய் மற்றும் அஜித் சிங் (1907 மே) மற்றும் பாலகங்காதர திலகர் (1908 ஜூலை) ஆகியோரை பர்மா மேண்டலே சிறைக்கு அனுப்பினார்.
- ❖ 1909 இந்திய கவுன்சில் சட்டம் (அ) மிண்டோ மார்லி சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

## ஹார்டிஞ்ச் பிரபு (1910-16):-

- ❖ மன்னர் ஐந்தாம் ஜார்ஜின் மகுடம் சூட்டு விழாவிற்கு 1911, டிசம்பரில் தர்பாரை நடத்தினார்.
- ❖ வங்கப் பிரிவினை (1911ல்) திரும்பப் பெறப்பட்டது. தலைநகரை கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றினார் (1911).
- ❖ தலைநகர் மாற்ற விழாவில் இவர் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. அதிஷ்டவசமாக தப்பிவிட்டார் (டிசம்பர் 23, 1912)
- ❖ காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா வந்தார் (1915)
- ❖ அன்னிபெசன்ட் தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பித்தார்.

## செம்ஸ்போர்ட் பிரபு (1916-21):-

- ❖ ஆகஸ்ட் பிரகடனம் 1917ன் மூலம் இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் படிப்படியாக இந்திய மக்கள் வசம் ஒப்படைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.
- ❖ இந்திய அரசுச் சட்டம் 1919 ( மாண்டேகு ஜெம்ஸ் போர்டு சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டது).
- ❖ ரௌலட் சட்டம் 1919, ஜாலியன் வாலாபாக் படுகொலை (ஏப்ரல் 13,1919.
- ❖ வங்காள கவர்னர் ஜெனரலக சர்.எஸ்.பி. சின்ஹா நியமிக்கப்பட்டார்.
- ❖ புதிய கல்விமுறையைக் கொண்டு வர 1917ல் சாட்லர் குழு உருவாக்கப்பட்டது.
- ❖ ஓத்துழையாமை இயக்கம் பூனாவில் பெண்கள் பல்கலைக்கழகத்தில் 1916ல் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ ஓத்துழையாமை இயக்கம் 1920ல் நடைபெற்றது.

## ரீடிங் பிரபு (1921-1926):-

- ❖ பத்திரிக்கைச் சட்டம் திரும்பப் பெறப்பட்டு ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது
- ❖ ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தை ஒடுக்கினார்.
- ❖ வேல்ஸ் இளவரசர் நவ. 1921 இந்தியா வந்தார்.
- ❖ வேல்ஸ் இளவரசர் 1922ல் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார்.
- ❖ கேளராவில் மாப்ளா கலகம் (1921) நடந்தது.
- ❖ அஹமதாபாத் மாநாடு 1921ல் நடந்தது.
- ❖ சுயராஜ்யக் கட்சி துவங்கப்பட்டது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- 1922ல் விஷ்வபாரதி பல்கலைக்கழகம் துவங்கப்பட்டு செயல்படத் தொடங்கியது.
- காக்கோரி ரயில் கொள்ளை ஆகஸ்ட் 9, 1925 ல் நடைபெற்றது.
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.என் ராயால் உருவாக்கப்பட்டது (1923).
- முல்தான், அமிர்தசரஸ், டெல்லி போன்ற இடங்களில் வகுப்புவாதக் கலவரம் நடந்தது (1923-25).
- வகுப்புவாதக் கலவரத்தில் ஆரிய சமாஜத்தின் சுவாமி சாரதானந்த் கொல்லப்பட்டார்.

## இர்வின் பிரபு (1926-31):-

- 1928ல் சைமன்குழு இந்தியாவிற்கு வந்தது.
- காங்கிரஸ் இந்திய மசோதாவை 1929ல் நிறைவேற்றியது.
- தண்டி பயணம் (மார்ச் 12, 1930)
- சட்ட மறுப்பு இயக்கம் (1930)
- முதலாவது வட்டமேஜை மாநாடு – 1930 இங்கிலாந்தில் கூடியது.
- காந்தி இர்வின் ஒப்பந்தம் ( மார்ச் 5, 1931)ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமறுப்பு இயக்கத்தை விலக்கிக்கொள்ளப்பட்டது.
- சிறையில் 64 நாள் உண்ணாவிரத்திற்குப் பின் ஜடின்தாஸ் இறந்தார் (1929).

## வெலிங்டன் பிரபு (1931-36):-

- இரண்டாம் வட்டமேஜை மாநாடு – 1931ல் லண்டனில் நடந்தது.
- காந்தியின் வருகையின்போது அவர் கைது செய்யப்பட்டார்.
- சட்டமறுப்பு இயக்கம் திரும்பவும் ஜனவரி 1932ல் துவங்கப்பட்டது.
- வகுப்புவாரி பிரதிநிதித்துவ விருது – ஆகஸ்ட் 16,1932ல் நாட்டில் கொண்டுவரப்பட்டது. இதனை எதிர்த்து காந்தி சாகும் வரை உண்ணாவிரதமிருந்தார்.
- மூன்றாம் வட்டமேஜை மாநாடு 1932ல் நடைப்பெற்றது.
- பூனா ஒப்பந்தம் கையெழுத்தானது 1932.
- இந்திய அரசுச்சட்டம் 1935 நிறைவேற்றப்பட்டது. அதில் மாகாணத்தில் இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டு மத்தியில் இரட்டை ஆட்சி கொண்டுவரப்பட்டது.

## லின்லித்கோ பிரபு (1936-44):-

- இந்திய அரசுச்சட்டம் மாகாணங்களில் செயல்படுத்தப்பட்டது. காங்கிரஸ் மந்திரி சபை 11ல் 8 மாகாணங்களில் அமைக்கப்பட்டது. அவர்கள் அக்டோபர் 1939வரை இரண்டு வருடம் பதவியிலிருந்தனர். இரண்டாம் உலகப் போரில் இந்தியா ஈடுபடுத்தப்பட்டிருந்தைக் கண்டித்து ராஜினாமா செய்தனர். முஸ்லீம் லீக் இதனை விமோசன தினமாக (டிசம்பர் 22) கொண்டாடியது.
- இரண்டாம் உலகப்போர் 1939ல் ஆரம்பித்தது.
- கிரிப்ஸ் குழு 1942ல் இந்தியா வந்தது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகஸ்ட் 8, 1942ல் தொடங்கப்பட்டது.

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

- ❖ சச்சில் பிரதமரானார் (மே 1940) காலனி நாடுகளின் விடுதலை இந்தியாவுக்குப் பொருந்தாது என அறிவித்தார்.

### வேவல் பிரபு (1944-47):-

- ❖ இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்குடன் சிம்லா மாநாடு நடத்த ஆயத்தம் செய்தார். (ஜுன் 25 1945) அது தோல்வியில் முடிந்தது.
- ❖ கேபினட் குழு திட்டம் (மே, 16, 1946) கொண்டுவரப்பட்டது.
- ❖ சட்டசபைத் தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டு இடைக்கால அரசு நேரு தலைமையில் அமைக்கப்பட்டது.
- ❖ இந்திய அரசியல் அமைப்பு சபையின் முதல் கூட்டம் டிசம்பர் 9, 1946ல் நடந்தது.

### மவுண்ட் பேட்டன் பிரபு ( மார்ச் 1947 – ஆகஸ்ட் 1947):-

- ❖ பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி வைஸ்ராய் மற்றும் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்.
- ❖ இந்தியப் பிரிவினைத் திட்டம் ஜுன் 3ல் உருவானது.
- ❖ இந்திய சுதந்திரச் சட்டம் பிரிட்டிஷ் பாரளுமன்றத்தில் ஜுலை 4, 1947ல் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் இந்தியா ஆகஸ்ட் 15, 1947 சுதந்திரமடைந்தது.
- ❖ இவர் ஜுன் 1948ல் ஒய்வு பெற்றார். பின் சி.இராஜகோபாலாச்சாரி பதவி ஏற்றார். ( இவர் தான் சுதந்திர இந்தியாவின் முதல் மற்றும் கடைசி இந்திய கவர்னர் ஜெனரல் ஆவார்).

### இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற இடம், வருடம் மற்றும் தலைவர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1885,1892 | பம்பாய், அலகாபாத் | டபிள்யு. சி. பானர்ஜி |
| 1886 | கல்கத்தா | தாதாபாய் நௌரோஜி |
| 1893 | லாகூர் | தாதாபாய் நௌரோஜி |
| 1906 | கல்கத்தா | தாதாபாய் நௌரோஜி |
| 1887 | மெட்ராஸ் | பக்ருதின் தியாப்ஜி (முதல் முஸ்லீம் தலைவர்) |
| 1888 | அலகாபாத் | ஜார்ஜ் யூல் (முதல் ஆங்கிலத் தலைவர்) |
| 1889 | பம்பாய் | சர் வில்லியம் வெட்டர் பர்ன் |
| 1890 | கல்கத்தா | சர் பெரோஷ் ஷா மேத்தா |
| 1895,1902 | பூனா, அஹமதாபாத் | எஸ். என். பானர்ஜி |
| 1905 | பனாரஸ் | ஜி.கே.கோகலே |
| 1907,1908 | சூரத், மெட்ராஸ் | ராஸ்பிஹாரி கோஷ் |
| 1909 | லாகூர் | எம். எம். மால்வியா |
| 1916 | லக்னோ | ஏ.சி. மஜும்தார் (காங்கிரஸ் மறு இணைப்பு) |

Downloaded from https://t.me/tnpscfree

https://t.me/tnpscfree

| | | |
|---|---|---|
| 1917 | கல்கத்தா | அன்னிபெசன்ட் (முதல் பெண் தலைவர்) |
| 1919 | அமிர்தசரஸ் | மோதிலால் நேரு |
| 1920 | கல்கத்தா | லாலா லஜபதிராய் சிறப்பு மாநாடு – நாக்பூர் விஜயராகவாச்சாரி |
| 1921,1922 | அஹமதாபாத், கயா | சி.ஆர். தாஸ் |
| 1923 | டெல்லி (சிறப்பு மாநாடு) | அபுல்கலாம் ஆசாத் (மிக இளைய தலைவர்) |
| 1924 | பெல்காம் | எம்.கே. காந்தி |
| 1925 | கான்பூர் | சரோஜினி நாயுடு (முதல் இந்திய பெண் தலைவர்) |
| 1928 | கல்கத்தா | மோதிலால் நேரு ( அனைத்து இந்திய இளைஞர் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது) |
| 1929 | லாகூர் | ஜே.எல்.நேரு (பூரண சுயராஜ்ஜிய தீர்மானம் நிறைவேற்றம்) |
| 1931 | கராச்சி | வல்லபாய் படேல் (அடிப்படை உரிமைகள் மற்றும் தேசிய பொருளாதார திட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது) |
| 1932,1933 | டெல்லி, கல்கத்தா | மாநாடு தடை செய்யப்பட்டது |
| 1934 | பம்பாய் | ராஜேந்திர பிரசாத் |
| 1936 | லக்னோ | ஜவஹர்லால் நேரு |
| 1937 | பைஸ்பூர் | ஜவஹர்லால் நேரு (கிராமத்தில் நடந்த முதல் மாநாடு) |
| 1938 | ஹரிபுரா | சுபாஷ் சந்திர போஸ் ( தேசிய திட்டக்குழு ஜவஹர்லால் நேரு தலைமையில் அமைக்கப்பட்டது) |
| 1939 | திரிபுரா | சுபாஷ் சந்திர போஸ் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் காந்தி எதிர்த்ததால் ராஜினாமா செய்தார். (காந்தி – டாக்டர் பட்டாபி சீத்தராமையாவை ஆதரித்தார்) ராஜேந்திர பிரசாத் தலைவராக நியமிக்கப்பட்டார். |
| 1940 | ராம்கர் | அபுல்கலாம் ஆசாத் |
| 1946 | மீரட் | ஆச்சார்யா ஜே.பி. கிருபாளினி |
| 1948 | ஜெய்ப்பூர் | டாக்டர் பட்டாபி சீத்தராமையா |

Dept. of Employment

Downloaded from https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses